


The Trumpet of the Seventh Angel

ஏழாம் தூதனின் எக்காளம்

1879-1916 ரீ-பிரிண்ட்ஸ் தமிழாக்கம்

மலர் - 12, இதழ் - 5 செப்டம்பர் – அக்டோபர் 2026



R4922

INTERESTING QUESTIONS
ஆவலைத் தூண்டும் கேள்விகள்

ஜீவிய உரிமைகள் தேவைப்பட்டன

கேள்வி : கிறிஸ்து அவரது பயன்பாட்டிற்கு பூமிக்குரிய ஜீவாதார உரிமையை பெற்றிருக்காவிட்டால் அவர் உலகிற்கு நித்திய பிதாவாக ஆக முடியுமா?

பதில் : ஆயிரம் வருட யுகத்தில் ஆதாமுக்கும் அவரது இனத்திற்கும் ஜீவாதார உரிமையை கொடுப்பதற்கு நமது கர்த்தராகிய இயேசு பூமிக்குரிய ஜீவாதார உரிமையை பெற்றிராவிட்டால், அவர் அந்த இனத்தின் பிதா என்று அழைக்கப்பட முடியாது. கொடுப்பதற்கு பூமிக்குரிய ஜீவன் அவரிடம் இல்லையென்றால் மனித இனத்தை அவரால் புதுப்பிக்க முடியாது.

நாம் "தேவனுக்கு சுகந்த வாசனையாக கிறிஸ்துவுக்குள் இருக்கிறோம்"

கேள்வி : சுகந்த வர்க்கம் பிரதான ஆசாரியனால் எரிக்கப்பட்டது. இது பரிபூரண மனிதனாகிய இயேசுவை குறிப்பிட்டது. பிரதான ஆசாரியனின் சரீர அங்கங்களும் மற்றும் உதவி ஆசாரியர்களும் இந்த பலியை செலுத்துகிறார்கள் என்று புரிந்து கொள்ளப்படலாமா? அப்படியிருக்குமானால் இது எப்படி காண்பிக்கப்படுகிறது?

பதில் : இரண்டாவது தடவை சுகந்த வர்க்கம் செலுத்தப்பட்டதாக லேவியராகமத்தில் எதுவும் சொல்லப்படவில்லை. இது இரண்டு தடவை செலுத்தப்பட வாய்ப்பே இல்லை. எனினும் சபையின் பலி, இயேசுவின் மரணத்தின் மூலம் விளைந்த பலனாய் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அது மரணம் வரை தொடர வேண்டும். முடிவில் அவர்கள் மகிமையில் ஏற்றுக்கொள்ளப்படுவார்கள் என்கிற கருத்து இருக்கிறது. "நமது கர்த்தர் இருந்த பிரகாரமாக நாமும் இவ்வுலகத்தில் இருக்கிறோம்." அவர் நாளுக்கு நாள் கீழ்ப்படிதலில் வளர்ந்து வந்தது போல நாமும் நாளுக்கு நாள் கீழ்ப்படிதலில் வளர்ந்து வருகிறோம். அவரது விஷயத்தில் அன்பின் ஆவியின் வைராக்கியம் விளங்கப்பண்ணப்பட்டது போல நாமும் விளங்கப்பண்ணுகிறோம். இல்லையென்றால் அந்த சரீரத்தில் அங்கங்களாக நாம் அனுமதிக்கப்பட முடியாது.

ஆகையால் அவர் செலுத்திய சுகந்த வர்க்கம் ஒரு வகையில், ஒரு குறிப்பிட்ட அளவு அவரது சரீரமாகிய முழு சபையையும் குறிப்பிட்டது. ஏனெனில் தெய்வீக நோக்கத்திற்கு இசைவாக, உலக தோற்றத்திற்கு முன்னே அவரது அங்கங்களாக ஏற்றுக்கொள்ளப்படுகிறவர்களுக்கு முன்னோடியாக பிரதிநிதியாக, பரிகாரியாக இருந்தார். ஆகையால் அவரது பரிபூரணத்தை செலுத்துவதில், அவரது சாட்டுதலின் மூலம் அவரது அங்கங்களாக பூரணப்பட நாமும் செலுத்தப்பட்டோம்.

இந்த உண்மையின்படி இரண்டாவது தடவையாக சுகந்த வாசனை செலுத்தப்பட்டதாக சொல்லப்படவில்லை. நாம் தனிப்பட்டவர்களாக நாம் பரிசுத்த ஸ்தலத்திற்குள் போகாமல், அவரது சரீர அங்கங்களாக செல்கிறோம். நாம் உலகிற்கு கெட்ட வாசனையாக இருந்தாலும், "நாம் கிறிஸ்துவில் தேவனுக்கு சுகந்த வாசனையாக இருக்கிறோம் என்று சொல்லலாம்." "ஆகையால், நீங்கள் பிரியமான பிள்ளைகளைப் போல தேவனை பின்பற்றுகிறவர்களாகி, கிறிஸ்து நமக்காக தம்மை தேவனுக்கு சுகந்த வாசனையான காணிக்கையாகவும் பலியாகவும் ஒப்புக்கொடுத்து நம்மில் அன்பு கூர்ந்தது போல, நீங்களும் அன்பிலே நடந்துகொள்ளுங்கள்." "நாங்கள் தேவனுக்கு கிறிஸ்துவின் நற்கந்தமாயிருக்கிறோம்." (எபேசியர் 5:1,2; 2 கொரிந்தியர் 2:15; வெளிப்படுத்தல் 8:3,4) "ஆகையால் ஸ்தோத்திர பலியை அவர் மூலமாய் எப்பொழுதும் தேவனுக்கு செலுத்தக்கடவோம். இப்படிப்பட்ட பலிகளின் மேல் தேவன் பிரியமாயிருக்கிறார்." (எபிரேயர் 13:15,16)

தேவ கிருபையால் அனைவரும் பிரகாரத்தில் இருக்கிறார்கள்

கேள்வி : தேவ கிருபை இல்லாமல் யாராவது பிரகாரத்தில் இருக்க முடியுமா?

பதில் : ஆசரிப்புக் கூடாரத்தின் பிரகார நிலைமை தேவனுடைய கிருபையை குறிக்கிறது. ஆனால் ஆசரிப்புக் கூடாரம் உயர்ந்த அளவில் கர்த்தரில் தேவனுடைய கிருபையின் நிலைமையை குறித்தது.

தற்காலத்தில் பிரகாரம் என்பது தேவனில் விசுவாசத்தை அப்பியாசப்படுத்துகிற, தேவனையும் அவரது விசுவாசத்தையும் நெருங்கி, நெருங்கி வருகிற நிலைமையை குறிக்கிறது. இப்படிப்பட்டவர்கள் தேவனுடைய தயவை பெற்றவர்கள். ஏனெனில் அவர்கள் அவரிடத்தில் விசுவாசத்தின் ஆவியை உடையவராக இருக்கிறார்கள். அது அவரது பரிபூரண சித்தத்தை அறியவும் செய்யவும் அவர்களை படிப்படியாக செல்ல வழி நடத்துகிறது. இந்த யுகத்தில் அழைக்கப்பட்ட அனைவரைப் பற்றிய தேவனுடைய சித்தம் என்னவென்றால், அவர்களது பரிகாரி மற்றும் இரட்சகரின் புண்ணியம் சாட்டப்படுவதின் மூலமாக அவர்கள் தங்களுடைய சரீரங்களை பரிசுத்தமும் தேவனுக்கு பிரியமுமான ஜீவ பலியாக ஒப்புக்கொடுக்க வேண்டும் என்பதே. அவரது சித்தத்தை அறியவும் செய்யவும் முழு சந்தர்ப்பம் கிடைத்த பிறகு இவர்கள் அர்ப்பணம் செய்ய

மறுத்தால், அந்த நேரத்திலிருந்து அவர்களது ஓட்டம் பின்னோக்கியதாக இருக்கும். அதில் அவர்கள் திரும்பி வரும் வரை தெய்வீக தயவு குறைந்து கொண்டே வரும். இப்படியிருந்தும் தேவனுடைய நோக்கங்கள் அவர்கள் மேல் பெருந்தன்மையாக இருக்கிறது. ஏனெனில் அவர்கள் ஆயிரம் வருட மேசியாவின் ராஜ்யத்தின் கிருபையான ஏற்பாடுகளை மனுக்குலத்துடன் பகிர்ந்து கொள்ளுவார்கள்.

பலியின் உடன்படிக்கையை ஏற்படுத்தி, தேவனுடைய பிள்ளைகள் மற்றும் இயேசுவின் உடன் சுதந்ததராக பிரகாரத்திலிருந்து உயர்ந்த தெய்வீக தயவுக்கு பரிசுத்த ஸ்தலத்திற்குள் நுழைவார்கள். பின்னர் பயத்தில் தயங்கி நின்று, அவர்களது பலியை நிறைவேற்றாமல் புறக்கணித்தால் நெருக்கமான ஐக்கியத்தில் நிலைத்திருக்கமாட்டார்கள். முடிவில் பிரகார நிலைமைக்குள் வெளியேற்றப்படுவார்கள். அங்கே அவர்கள் திரள் கூட்டத்தாராக தேவ தயவில் இருப்பார்கள். இல்லையென்றால் அவர்கள் முழுவதுமாக பின்வாங்கினால் அவர்களது பங்கு இரண்டாம் மரணத்தில் இருக்கும்.

R4927

OUR RESPONSIBILITY TO ONE ANOTHER
ஒருவருக்கொருவர் நமது பொறுப்பு

"பலமுள்ளவர்களாகிய நாம் நமக்கே பிரியமாய் நடவாமல், பலவீனருடைய பலவீனங்களைத் தாங்க வேண்டும்." ரோமர் 15:1

நமது வசனத்தில் தெய்வீக ஆவியின் சாரமாகிய அன்பின் கொள்கையே மாபெரும் கொள்கையாக எடுத்துரைக்கப் -பட்டுள்ளது. தேவன் அன்பாக இருக்கிறார். அன்பின் ஆவியே தேவ ஆவியாக இருக்கிறது. இந்த ஆவி தேவனுடைய பிள்ளைகளிடையே கிரியை செய்து, ஒருவருக்கொருவர் கவனித்துக் கொள்ள வேண்டியதின் அவசியத்தை ஏற்படுத்துகிறது. அது சுயநலத்தின் ஆவிக்கு எதிரானது. அது மற்றவர்களின் நலனையும் தன்னுடைய நலனையும் விசேஷமாக விசுவாச வீட்டாரின் நலனையும் நாடுகிறது.

ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் முடிந்தவரை பலவீனமுள்ளவர்களுக்கும் உதவி தேவைப்படுகிறவர்களுக்கும் உதவுவதே நமது பண்பாக இருக்க வேண்டும். உலகத்தின் பொதுவான பண்பு இதற்கு எதிர்மாறாக இருக்கிறது. அவர்கள் பலவீனமுள்ளவர்களை ஏளனமாக பேசி, கூறுவதாவது: "அவர்கள் அனுதாபத்திற்கு உரியவர்கள்." ஆனால் உண்மையில் பலவீனமுள்ளவர்கள் அதிக அனுதாபத்தை பெறுவதில்லை. உலகமானது வெற்றி பெற்றவர்களையும், பலம் பொருந்தியவர்களையும் செல்வந்தர்களையும் கைத்தட்டி பாராட்டுகிறது. ஆனால் தேவன் பலவீனமுள்ளவர்கள் மற்றும் தாழ்ந்த நிலையில் உள்ளவர்கள் மேலும் அனுதாபம் கொண்டிருக்கிறார். ஆகையால் நாமும் கூட, அனுதாபம் தேவைப்படாதவர்களைக் காட்டிலும் அனுதாபம் தேவைப்படுகிறவர்கள் மேல் அதிக அனுதாபம் கொள்ள வேண்டும். சபையில் சிலர் அறிவு ரீதியாக பலமுள்ளவர்களாகவும், சிலர் பலவீனராயும், சிலர் சரீர பிரகாரமாக பலமுள்ளவர்களாகவும், மற்றவர்கள் சரீர பிரகாரமாக பலவீனராயும் சிலர் ஆவிக்குரிய ரீதியில் பலமுள்ளவர்களாயும் மற்றவர்கள் பலவீனராயும் இருக்கிறார்கள்.

நாம் பலமுள்ளவர்களாய் இருப்பதற்குத்தக்கதாக மற்றவர்கள் தங்கள் பலவீனங்களை ஜெயங்கொள்ளுவதற்கு உதவி செய்தால் மட்டுமே போதாது. ஆனால் மற்றவர்கள் தங்கள் குறைபாடுகளை எப்படி ஜெயங்கொள்ளுவது என்பதை சுட்டிக்காட்டி, உற்சாகப்படுத்தி அனைவருக்கும் உதவ வேண்டும். ஆனால் இந்த காரியங்களை மிகவும் பலமாக செய்யக்கூடாது. ஏனெனில் அநேகர் தங்களது சொந்த பலவீனங்களை உணர மாட்டார்கள். பலமுள்ளவர்கள் அவர்களது சிரமங்களில் பொறுமை காட்டி அவர்கள் பெரும் தவறுகளை சகிக்க வேண்டும். ஒருவர் தன்னுடைய பலவீனத்தை காணக்கூடுமானால் முயற்சி செய்வதற்கு அது ஆச்சரியமான ஊக்கமாக இருக்கும். ஆகையால் பலமுள்ளவர்களின் பணி என்னவென்றால், மற்றவர்களது பலவீனங்கள் அவர்களை புண்படுத்தாமலும் அல்லது அவர்கள் இடறாமலும் இருக்க அவர்களது கவனத்தை ஈர்ப்பதாகும். இந்த பலவீனங்களுக்கு அவர்களது கவனத்தை தவறான வழியில் ஈர்த்தால் அவர்கள் இடறி விழ ஏதுவாகும். ஞானமான வழியில் அவர்களது கவனத்தை ஈர்த்தால் அவர்களுக்கு உதவிகரமாக இருக்கும். இது வாழ்க்கையின் எல்லா காரியங்களிலும் செயல்படுத்தப்படலாம். நமது சொந்த பலவீனங்களை கண்டுபிடித்து அவற்றை ஜெயங்கொள்ள எப்பொழுதும் நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். சகோதரர்கள் மேல் அக்கறை கொண்ட, காரியங்களை அவர்களின் நிலைப்பாட்டில் கவனித்து அவர்களுக்கு உதவுவதில் நாம் சந்தோஷப்பட வேண்டும்.

சபையில் மூப்பர்கள் உண்மையில் மூத்தவர்களாக இருக்க வேண்டும். குடும்பத்தில் மற்ற குடும்ப அங்கங்களுக்கு உதவவும் அவர்களது காரியங்களை கவனிக்கவும் தகப்பனுக்கு அடுத்தபடியாக மூத்த சகோதரன் இருக்க வேண்டும். சபையிலும் அப்படியே இருக்க வேண்டும். சத்தியத்தில் மிகவும் அபிவிருத்தி அடைந்துள்ள, சத்தியத்தில் மூத்தவராக இருப்பவர்கள் வாலிபர்களை, ஊக்குவித்து உதவி செய்து உயர்த்த வேண்டும். இதை பூமிக்குரிய காரியங்களில் ஒவ்வொரு குடும்பத்திலும் நாம் பார்க்கிறோம். மூத்தவர்கள் குடும்பத்தில் தங்கள் சொந்த வசதிகளை இழந்து, தங்களுக்கு முக்கியத்துவம் எடுத்துக்கொள்ளாமல், தங்கள் சொந்த விருப்பங்களை விட்டுக்கொடுத்து குடும்பத்தில் இளையவர்களுக்கு உதவிகரமாக இருக்கிறார்கள். பலமுள்ளவர்களும் பலவீனரும் ஆவிக்குரிய காரியங்களை கையாண்டு கிருபையிலும், அறிவிலும் வளர வேண்டும் என்பதே அப்போஸ்தலரின் கருத்தாக இருக்கிறது.

"நாம் நமக்கே பிரியமாக நடக்கக்கூடாது"

நாம் கர்த்தருடன் பிரதிஷ்டைப் பண்ணியிருந்தாலும் பாவத்திலிருந்து நாம் திரும்பியிருந்தாலும் பாவம் செய்வதற்கான ஒரு இயல்பை நாம் பெற்றிருக்கிறோம். நமது தலைப்பு வசனத்தில் பிற்பகுதி நமக்கே பிரியமாக நடக்கக் கூடாது என்று கூறுகிறது. எனினும் புது சிருஷ்டியின் பண்பு பாவம் செய்வது அல்ல. ஆனால் "மகா பரிசுத்தமான விசுவாசத்தில்" தன்னைத்தான் வளர்த்துக்கொண்டு நன்மை செய்வதாகும். "மகா பரிசுத்தமான விசுவாசத்தில்" உறுதிப்படுத்திக்கொள்ள நாடுவதில் அவன் சொந்த நலனை தனது மனதில் முன்னிறுத்துவான். தன்னை உறுதிப்படுத்த சொந்த நலனை முன்னிறுத்தும் போது அவன் மனதில்

வைக்க வேண்டியதாவது: கிறிஸ்துவின் அங்கமாக இருக்கக்கூடிய பொறுப்பை பெற்றுக்கொண்டு தனக்கு மட்டுமே பிரியமாக நடவாமல், மற்றவர்களுக்கு ஊழியம் செய்வதில் நமக்குரிய சில உரிமைகளையும் முறையானவைகளையும் விட்டுக்கொடுக்க நாம் விருப்பமுள்ளவர்களாக இருக்க வேண்டும் என்பதாகும். இப்படியாக இதன் மூலம் தேவ கிருபையால் ஒரு பாடத்தை பெற வேண்டும். உதாரணத்திற்கு, ஆவியில் அதிகமாக அபிவிருத்தி அடைந்தவர்கள் வேலையைப் பற்றி விவாதிப்பதை செய்யாதிருக்கலாம். தங்களது சொந்த முன்னுரிமையைக் காட்டிலும், சகோதரர்களுக்கு மிகவும் உதவியாயிருக்கும் வகையில் தனது சொந்த வேலைகளை மாற்றி அமைத்துக்கொள்ள நாட வேண்டும்.

கர்த்தருடைய பிள்ளைகளின் பல்வேறு வகுப்புகளில் வேத மாணவர்கள் வகுப்பார், மற்றவர்களிடமிருந்து தங்களை பிரித்து தனித்து இருப்பதில் மிகவும் முன்னேறியிருக்கிறார்கள். இந்த பண்பிற்கு எதிராக நமது செல்வாக்கை பயன்படுத்த முயற்சித்திருக்கிறோம். குறைவாக அறிவு உள்ளவர்கள் அறிந்து கொள்ள சந்தர்ப்பத்தை பெறுவார்களாக. அவர்கள் நல்ல கடினமான கேள்விகளைக் கொண்டு வருவது நல்லது. கூட்டங்களின் இடம் மற்றும் நேரம் நம்மை திருப்திப்படுத்துவதாக மட்டுமே இருக்கக்கூடாது. சிலர் கூட்டத்தை நடத்த சுலபமாக வரமுடியாத இடத்தை தீர்மானித்தால், அதை சுயநலமாக ஏற்றுக்கொள்ளக்கூடாது. அதிகமாக பேர் தேர்வு செய்கிற இடத்தை தீர்மானிக்க வேண்டும். இந்த சிந்தை சபையில் கடைபிடிக்கப்பட்டால் அது அதிக முன்னேற்றம் அடையும். கர்த்தரின் ஜனங்கள் இந்த பாடத்தை பொதுவாக கற்று வருகிறார்கள்.

இதே கருத்தே சபையின் ஊழியர்களுக்கும் பொருந்தும். மூப்பர்கள், "நாங்கள் சேர்ந்து தனியாக பேசி பல்வேறு காரியங்களை தீர்மானிக்கிறோம்" என்று கூறலாம். எப்பொழுதுதாவது அது ஞானமாகக் கூட இருக்கலாம். ஆனால் மூப்பர்கள், உதவிக்காரர்களையும் சேர்த்துக் கொண்டு பேசும் போது, அவர்களுக்கு நம்பிக்கையும் தேவனுடைய ஊழியத்தில் இருப்பதாக எண்ணமும் இருக்கும். எல்லாரும் சேர்ந்து கூடி பேசுவது நல்லதாக இருக்கும். தீர்மானத்தை எல்லாம் இரகசியமாக வைக்காமல் சபையாருக்கு அறிவிப்பது நல்லது, சில சமயங்களில் சபைக்கு சொல்லக்கூடாத காரியங்கள் இருக்கலாம். ஆனால் ஒழுங்கின்படி மூப்பர்களும், உதவிக்காரர்களும், சபையில் நேரமும் தகுதியும் உடையவர்களையும் சேர்த்து பேசுவது நல்லது. இதன்மூலம் எந்த பிரிவினையையும் யாரும் உணரமாட்டார்கள்.

ரோம சபையில் குருமார்கள் தனியாக சபையாக இருக்கிறார்கள் என்றும் மற்றவர்கள் சபையின் குழந்தைகளாக இருக்கிறார்கள் என்றும் கூறுகிற கொள்கை நூற்றாண்டுகளுக்கு முன்பே ஆரம்பித்து விட்டது. இந்த கொள்கை அதன் பிறகு புரட்டஸ்டண்ட் சபையிலும் கடைப்பிடிக்கப்பட்டது, இப்படியாக குருமார்கள் தங்களை தனிப்பட்ட வகுப்பார் என தாங்களே பிரித்துக்கொண்டார்கள். ஆனால் கர்த்தர் சிலரை மூப்பர்களாக நியமித்து அவர்களை பிரிக்காமல் வைத்திருந்தார். நாம் எல்லோரும் ஒரே சபை. இப்படியாக அப்போஸ்தலர், கண்ணானது கால்களை நோக்கி, "நீ எனக்கு தேவையில்லை" என்று சொல்லக்கூடாது என்று கூறுகிறார். ஒவ்வொரு அங்கமும் கவனிக்கப்பட வேண்டும். மற்றவர்களைக் காட்டிலும் தான்தான் முக்கியம் என்று நினைக்கக்கூடாது. ஒருவர் உயர்ந்த பதவியில் இருந்தால் அவர் அதை மற்றவர்களுக்காக பயன்படுத்த வேண்டும். ஒருவர் தாழ்ந்த பதவியிலிருந்தால், அதை அவர் பொதுவான நன்மைக்கு பயன்படுத்த வேண்டும். இப்படியாக சபையானது அபிஷேகம் பண்ணப்பட்டவரின் சரீர அங்கங்களாக நிறைவடைய தயாராகும்.

எதற்காகவும் கொள்கைகள் கைவிடப்படக்கூடாது. ஆனால் சுதந்தரங்களும் தனிப்பட்ட உரிமைகளும் மற்றவர்களது நலன்களுக்காகவும் தேவனை சந்தோஷப்படுத்துவதற்காகவும் விடப்படலாம். அப்போஸ்தலர் பவுல் கொள்கைகளை பாதுகாக்க எந்த அளவுக்கும் செல்ல தயாராயிருந்தார். (கலாத்தியர் 2:5-11) ஆனால் கிறிஸ்துவுக்காகவும் சபைக்காகவும் பூமிக்குரிய உரிமைகள், சலுகைகள் மற்றும் சுதந்தரங்களை பலி கொடுப்பதில் நமது கர்த்தராகிய இயேசுவுக்கு அடுத்த படியாகவும் அனைத்து சபைக்கும் ஒரு உயர்ந்த முன்மாதிரியாகவும் இருக்கிறார்.

"எவ்வளவு ஞானமாக இருக்கின்றன தேவனுடைய பிரமாணங்கள்;

எவ்வளவு உறுதியாயிருக்கின்றன அவரது நெறிமுறைகள்."

R4928

THE GRACE OF HUMILITY
தாழ்மையின் கிருபை

"மனத்தாழ்மையினால் ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள்." பிலிப்பியர் 2:3

இயற்கையான சுபாவத்திலேயே தாழ்மையாக உள்ளவர்கள் தங்களைக் காட்டிலும் மற்றவர்களை மேன்மையாக எண்ணுவதில் கஷ்டமிருக்காது. ஆனால் இயற்கையிலேயே வேறு மாதிரியான மனோபாவம் உடையவர்கள் இருக்கிறார்கள். இது அவர்களுக்கு தவறாக இல்லாதிருக்கலாம். ஏனெனில் அவர்கள் மற்றவர்களைக் காட்டிலும் அதிக தற்பெருமை உடையவர்களாக பிறந்திருப்பார்கள். நாம் தாழ்மையான மனோபாவத்துடன் பிறந்திருந்தாலும் தற்பெருமையும் கௌரவமும் உள்ளே வராதபடி கவனித்துக் கொள்ளவேண்டும். சில சமயங்களில் சிலர் தாங்கள் அதிக அறிவுடையவர்களாக இருக்கிறோம் என்று பெருமை பாராட்டிக்கொள்வார்கள். தனக்கு மற்றவர்களைக் காட்டிலும் அதிக புத்திக்கூர்மை இல்லை என்று தெரிந்தும் கூட அவர்கள் பிரகாசிக்க விரும்புகிறார்கள். மற்றவர்கள் பிரகாசத்தை இருட்டடித்து, இருளில் தாங்கள் அதிகமாக பிரகாசிக்க விரும்புகிறார்கள்.

ஆகையால் தாழ்மையான மனோபாவத்தை வளர்ப்பதற்கும் அதை இழக்காமல் இருப்பதற்கும் அப்போஸ்தலரின் ஆலோசனையை பின்பற்றுவது நல்ல காரியமாக இருக்கும். "ஆகையால் ஏற்ற காலத்திலே தேவன்

உங்களை உயர்த்தும்படிக்கு அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்." "தன்னைத்தான் உயர்த்துகிறவனெவனும் தாழ்த்தப்படுவான். தன்னைத்தான் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்." (1 பேதுரு 5:6; லூக்கா 14:11) இந்த தாழ்த்துதலை தேவன் செய்வார். பழிவாங்கும் ஆவியினால் அல்ல. ஆனால் தன்னைதான் உயர்த்துகிறவர்கள் தாழ்த்தப்பட வேண்டும் என்பதற்காக ஆகும்.

எனினும் சிலர் சந்தர்ப்ப சூழ்நிலைகளினால் உண்மையிலேயே அவர்கள் அப்படிச் செய்யாதிருந்தும் பெருமையடித்துக்கொள்வதாக காணப்படலாம். ஆனால் சூழ்நிலைகளும் நிலைமைகளும் அப்படி காணப்படும்படி செய்கிறது. ஆகையால் அப்போஸ்தலருடைய கட்டளையை நிறைவேற்றுவதற்கு, வசனத்தில் அவர் கூறியுள்ளது போல தாழ்மையின் ஆவியை நாம் வளர்க்க வேண்டும். நமது நல்ல குணங்களை மற்றவர்களுடைய குணங்களுடன் ஒப்பிடாமல் இருக்க வேண்டும். நல்ல குணங்களை நாம் பெற்றிருந்தால் நமக்கு சந்தோஷம். அவைகளை நாம் பயன்படுத்திக் கொள்ளுவோமாக.

மற்றவர்களுடன் நம்மை ஒப்பிடும் போது நமது சொந்த களங்கங்களை நாம் கவனிக்க வேண்டும். நல்ல குணங்களை, நல்ல பண்புகளை சிலரிடம் காண முடியாமல் இருக்கிறது. ஆகையால் நாம் நமது சொந்த பலவீனங்களையும் மற்றவர்களது நல்ல குணங்களையும் நாம் கவனித்தோமானால் மற்றவர்கள் நம்மை அதிகமதிகமாக பாராட்டுவதைக் காணலாம். இது நமக்கு பந்தயத்தில் ஓடுவதற்கு உதவிகரமாக இருக்கும்.

நமது சத்துருக்களிடம் கூட மெச்சக்கூடியவைகள் இருக்கின்றன என்பதற்காக ஒரு விளக்கத்தைப் பார்க்கலாம். ஒருத்தி தனது அத்தையிடம், "ஒவ்வொருவரிடமும் உள்ள நல்ல விஷயத்தை சொல்ல முடியுமா?" என்று கேட்டாள். "பிசாசைக் குறித்துக் கூட நல்லதை சொல்வீர்கள் என்று எதிர்பார்க்கிறேன்." "அது அப்படித்தான்" என்று அத்தை பதிலளித்தாள். அவள் என்ன சொல்கிறாள் என்று கேட்போம். "அத்தை, சாத்தானிடம் நல்ல காரியம் எதாவது இருக்கிறதா?" என்று மறுபடியும் கேட்டாள். அதற்கு அத்தையின் பதில்: "சாத்தானிடம் இருக்கும் விடாமுயற்சியை நாம் அனைவரும் பெற்றிருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்."

சத்துருவிடம் ஒரு மெச்சக்கூடியதை, பாராட்டக்கூடியதை நம்மால் காணக்கூடுமென்றால் மற்றவர்கள் அனைவரிடமும் நிச்சயமாக மெச்சக்கூடியதை, பாராட்டக்கூடியதை காண முடியும்; அவர்களுக்கு நன்மதிப்பை கொடுக்க முடியும். இப்படியாக நமது எதிர்கால பணிக்கு மிகவும் உதவியாயிருக்கக்கூடிய ஆவியை நாம் வளர்க்க வேண்டும.

நமது பலவீனத்தை கவனித்து, நாம் கூறியிருப்பது போல நம்மை தாழ்மையான மனப்பான்மையுள்ளவர்களாக மாற்றி அந்த தாழ்மையான மனப்பான்மையில் நம்மை வைத்திருக்க வேண்டும். கர்த்தரிடமும் அவரது வேலையிலும் நாம் சரியான உறவில் இல்லையென்றால் இது நம்மை அதைரியப்படுத்தும். "தேவனிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கேதுவாக நடக்கிறது" என்பதை நாம் அறிவோம். (ரோமர் 8:28) அப்படிப்பட்டவர்களுக்கு தமது வசனத்தின் மூலம் "கீலேயாத் பிசினை" அவர்களை ஊக்குவிக்கவும், அபிஷேக எண்ணெய் மற்றும் அவர்களை தேற்றுதலுக்காகவும் அறிந்திருக்கிறார்.

நாம் மனப்பூர்வமாய் பாவம் செய்யாதவர்களாய் இருந்தால், அவமானகரமான காரியங்களை நல்ல சிந்தையில் எடுத்துக்கொண்டால் கர்த்தர் நம்மை தள்ளிவிட மாட்டார். இந்த பண்பே அவர் விரும்புகிறதாக இருக்கிறது. மற்றவர்களது பார்வையிலும் கர்த்தரின் பார்வையிலும் நம்மை அவமானப்படுத்தும் காரியங்கள் மூலம் நாம் சரியானபடி பயிற்றுவிக்கப்பட்டால், இவைகள் நமது நன்மைக்கேதுவாக இருக்கும். அப்படிப்பட்டவைகள் மூலம் அவர் நம்மை ஆசீர்வதித்து, உயர்த்தி, அன்பின் பாராட்டுதலை அளிப்பார். இதை செய்ய அவர் தீர்மானிக்கிறார். கர்த்தர் நமக்கு தேவையான உற்சாகத்தைக் கொடுப்பார் என்பதற்கான சான்றை பெற்றிருக்கிறோம். தங்களால் முடிந்த வரை அவருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிகிறவர்கள் மேற்கொள்ளப்படமாட்டார்கள் என்பதற்கான உறுதியான வேத வசனங்களை பெற்றிருக்கிறோம்.

ஒவ்வொருவரும் தங்களது சொந்த காரியங்கள், நன்மைகள் அல்லது திறமைகளை கவனித்து, மற்றவர்களை அசட்டை செய்தால் அது பொதுவான சுயநலத்தை வெளிப்படுத்தும்; அன்பு மற்றும் பெருந்தன்மையின் ஆவியாகிய கிறிஸ்துவின் ஆவியின் குறைவை வெளிப்படுத்தும். அன்பின் பரிசுத்த ஆவியை அதிமதிகமாக பெற்றிருக்கும் அளவுக்குத்தக்கதாக நாம் மற்றவர்களின் நலனில் அக்கறையுடையவர்களாக இருப்போம். இந்த சிந்தையை, பண்பை அல்லது ஆவியை நமது பிரியமுள்ள இரட்சகர் பெற்றிருந்தார். அதை ஆச்சரியமான விதத்தில் வெளிப்படுத்தினார். இறுதியாக நாம் "சிறுமந்தையாக" இருக்க வேண்டுமானால் அதை நாம் நகலெடுத்து நமது குணலட்சணங்களில் அபிவிருத்தி அடைய வேண்டும். இவர்கள் கிறிஸ்துவுடன் அவரது மகிமையில் உடன் சுதந்தரராக இருப்பார்கள். இந்த நிலைமைக்கு அவருடன் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு அவர்கள் "தம்முடைய குமாரனுடைய சாயலாக" இருக்க வேண்டும் என்று தேவன் முன்னரே தீர்மானித்திருக்கிறார். (ரோமர் 8:29)

நமது மகா முன்னுதாரணர்

இந்த தாழ்மையின் ஆவியை நமது கர்த்தராகிய இயேசு எப்படி அப்பியாசப்படுத்தினார் என்பதை நாம் ஓரளவுக்கு புரிந்துகொள்ள முடியும். இயேசு அடைந்த அவமானத்தையும் அது எப்படி அவரது தற்கால உயர்த்தப்படுதலுக்கு வழி நடத்தியது என்பதையும் அப்போஸ்தலர் சுருக்கமாக தொகுத்து கூறுகிறார். நமது கர்த்தராகிய இயேசு நமது சுபாவத்தை எடுத்து, பாவத்தின் தண்டனையை சகித்ததற்கு முன்பு, அவர் ஆவியின் ஜீவியாக "தேவ சாயலில்" உயர்ந்த மகிமையில் இருந்தார் என்று அவர் நமக்கு குறிப்பிடுகிறார். தேவன் அவருக்கு வழங்கியதற்கு மேலாக, தம்மை தேவனுக்கு மேலாக சுயநலத்துடனும் இலட்சியத்துடனும் உயர்த்த விரும்பாமலும், சாத்தான் செய்தது போல போட்டி ராஜ்யத்தை ஏற்படுத்த நாடாமலும், தேவனுக்கு சமமாயிருப்பதை கொள்ளையிட விரும்பாமலும், சாத்தனைப் போல "நான் நட்சத்திரங்களுக்கு (பிரகாசமானவைகள். தூதசேனைகள்) மேலாக ஏறுவேன். உன்னதமானவருக்கு ஒப்பாவேன் (சமமாவேன்)" என்று சொல்லாமலும் இருந்தார். இதற்கு மாறாக, தேவனுடைய சிருஷ்டிக்கு ஆதியுமாயிருக்கிற நமது கர்த்தராகிய இயேசு பிதாவானவரின் திட்டத்திற்கு இசைவாக தன்னைத்தானே தாழ்த்தினார்; கீழான சுபாவத்தை

எடுத்துக்கொண்டு, அதற்கான பணிகளில் ஈடுபட்டு, பெரும் அவமானத்தை மாத்திரமல்ல, வலிகளையும் பாடுகளையும் சகித்தார்.

"ஒரே பேறான குமாரன்" எப்படி இந்த ஏற்பாடுகளுக்கு இணங்கியதின் மூலம் தமது சித்தத்தையும் தாழ்மையும் நிரூபித்தார் என்று அப்போஸ்தலர் குறிப்பிடுகிறார். அவர் மனிதனான பிறகும் அதே தாழ்மையின் ஆவியில் தொடர்ந்து இருந்து, மனிதனை மீட்கும் விலைக்கிரயமாக மரிப்பதின் மூலம் தெய்வீக திட்டத்தின் ஒவ்வொரு எழுத்தையும் நிறைவேற்ற தயாராயிருந்தார். அது மாத்திரமல்ல, அந்த மரணம் எல்லா வகையிலும் அவமானகரமானதாக இருந்தது மாத்திரமல்ல, மீட்கும் பொருளின் தேவைக்கும் மேலாக தேவைப்படும் போது, அவர் பின்வாங்காமல், "என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது" என்று கூறி அவமானகரமான "சிலுவை மரணத்திற்கும்" தம்மை ஒப்புக்கொடுத்தார்!

இங்கே தேவனிடத்தில் தாழ்மை, சாந்தம் மற்றும் கீழ்ப்படிதலின் விளக்கத்தை பெற்றிருக்கிறோம். இதற்கு முன் இது வெளிப்படுத்தப்படவில்லை. இந்த முறையைதான் நாம் கடைபிடிக்க நாட வேண்டியது என்று அப்போஸ்தலர் குறிப்பிடுகிறார். "கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது." (பிலிப்பியர் 2:5-10)

இந்த தாழ்மை நமது ஆண்டவரை பரிபூரண கீழ்ப்படிதலை சமர்ப்பிக்க சாத்தியப்படுத்தியது. இதனிமித்தமாக பரம பிதாவானவர் அவரை உயர்வாக கனப்படுத்தி மரித்தோரிலிருந்து தெய்வீக சுபாவத்திற்கு, தூதர்கள், துரைத்தனங்கள் மற்றும் வல்லமைகள், பேர் பெற்றிருக்கும் எல்லா நாமத்திற்கும் மேலாக உயர்த்தினார். இதற்காகவே "ஆதலால்" என்ற வார்த்தையை அப்போஸ்தலர் குறிப்பிடுகிறார். அதாவது தற்போது விளக்கப்பட்ட இந்த தாழ்மையினிமித்தம் தேவன் அவரை உயர்த்தினார்.

நம்முடைய கர்த்தருடைய அழகான பரிபூரண தாழ்மை மற்றும் கீழ்ப்படிதல் மட்டும் அவர் பரம பிதாவுக்கு உறுதியான விசுவாசம் உடையவராயிருந்தார் என்பதை விளங்கப்பண்ணாமல், அவரில் தேவனுடைய ஆவியும் அன்பும் செழிப்பாக குடிகொண்டிருந்தது என்பதையும் விளங்கப்பண்ணியது. ஏனெனில் அவர் பிதாவானவரின் அன்பை அவர் இரட்சிக்கிற இனத்தாருக்கு பகிர்ந்தளித்தார். இதனிமித்தமாக தகப்பனாகிய ஆபிரகாமின் உடன்படிக்கையின் விதிமுறையின்படி பூமியின் சகல வம்சங்களையும் ஆசீர்வதிக்கக்கூடிய தெய்வீக முகவராக இருக்கதகுதியுள்ளவராக இருக்கிறார்.

இப்படியாக அவர் இரட்சிக்கப்பட்ட இனத்தாரை ஆசீர்வதிக்கக்கூடிய "ஆபிரகாமின் வித்தாக" ஆகியிருக்கிறார். ஆகையால் "அவருக்கு முன்பாக முழங்கால்கள் யாவும் முடங்கும். நாவுகள் யாவும் அறிக்கை பண்ணும்." இரட்சிக்கப்பட்ட உலகத்தின் மேல் தெய்வீக ஆசீர்வாதங்களை பொழிவதற்கான "ஏற்ற காலம்" வரும்பொழுது தேவனுடைய இணக்கத்திற்கு வந்து நித்திய ஜீவனுக்கு பாத்திரவான்களாக அவர்கள் அனைவரும் சத்திய அறிவிற்குள் வருவார்கள்.

மற்றவர்கள் மேல் உள்ள அக்கறையில் தேவனிடத்தில் சரியான தாழ்மை, தன்னைத்தான் வெறுத்தல் மற்றும் கீழ்ப்படிதலில் நம்முடைய கர்த்தராகிய இயேசு மாபெரும் உதாரணமாக இருக்கிறார் என்று அப்போஸ்தலர் அவரை உயர்த்திப் பிடிக்கிறார். அது மாத்திரமல்ல, அவருடைய கீழ்ப்படிதலின் பரிசாக அல்லது பலனாக பிதாவானவரால் எல்லாவற்றிற்கும் மேலாக உயர்த்துதலைக் குறிப்பிடுகிறார். நாமும் உற்சாகப்படுத்தப்பட்டு, நமது இரட்சகரின் அடிச்சுவட்டை விசுவாசத்துடன் பின்பற்றி, தற்கால நன்மைகளை கர்த்தருக்காகவும் அவரினிமித்தமும் பலியிட்டால், பிறகு ஏற்ற காலத்தில் அவரோடு கூட மகிமைப்படுத்தப்பட்டு, அவரது சபையாக, உடன் சுதந்தரராக, அபிஷேகம் பெற்ற சரீரத்தின் அங்கங்களாக அவரது நாமத்தில், சிங்காசனத்தின் பணியில் பங்குபெறுவோம்.

பிரியமானவர்களே, பிலிப்பி சபைக்கு அப்போஸ்தலரின் அறிவுரையை நமக்கு உபயோகிப்போமாக. (பிலிப்பியர் 2:12-16) நாம் நுழைந்த வழியில் தொடர்ந்து, அதிகமதிகமாக பந்தய மைதானத்தில் முன்னேறுவோமாக. கிறிஸ்துவின் பண்பாகிய தாழ்மை மற்றும் கீழ்ப்படிதல் என்கிற குணலட்சணத்தின் மூலமாக நாம் பயத்துடனும் நடுக்கத்துடனும் செயல்படுவோமாக. இப்படியாக தேவன் வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிற கனம், மகிமை, சாகாமை என்கிற மகா இரட்சிப்பில் நமது சொந்த பங்குக்காக செயல்படுவோமாக.

நமது இரட்சிப்பை செயல்படுத்துதல்

நமது சொந்த நீதியினால் செயல்படுத்த முடியாது. ஆனால் கிறிஸ்துவின் இரத்தத்தினால் நாம் நீதிமானாக்கப்பட்டு, பரம அழைப்புக்கு அழைக்கப்பட்டு, நமது அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதிப்படுத்த முடியும். கர்த்தர் நமக்கு வைத்திருக்கிற மாதிரியை பின்பற்றி அவருடைய வழிமுறைகளுக்கு கவனம் செலுத்தி, அவரில் நாம் அழைக்கப்பட்டிருக்கிற மகா பெரிய இரட்சிப்புக்கு நமது பங்கை செயல்படுத்த முடியும். நாம் மாம்சத்தில் பூரணம் அடையாமல், சித்தத்தில், நோக்கத்தில், இருதயத்தில் பூரணம் அடைவோம். நமது திராணிக்குத்தக்கதாக நமது சரீரத்தை பாதுகாத்து கொள்ளுவோமானால், அதன் பலவீனங்களும், அபூரணங்களும் பரிசுத்தராகிய நமது கர்த்தரின் புண்ணியத்தினால் மூடப்பட்டதாக கருதப்படும்.

பலவீனம் மற்றும் பாவத்திற்கு எதிரான போராட்டம் நம்முடையது மட்டுமல்ல, தேவன் நமக்காக இருக்கிறார், நம்மை அழைத்துமிருக்கிறார் மற்றும் நமக்கு உதவி பண்ணுகிறார். அவர் முன்னரே அவரது வாக்குத்தத்தத்தின் வார்த்தையின் மூலம் நம்மில் கிரியை நடப்பிக்கிறார். அவரது சித்தத்தை அவருடைய நன்விருப்பத்துடன் சித்தங்கொண்டு செய்ய அவர் நம்மை வழிநடத்தியிருக்கிறார். அவரது ஆலோசனைக்கு நாம் தொடர்ந்து செவி கொடுப்போமானால், அவரது சத்திய வார்த்தையினால் நம்மை வழிநடத்தி, நமக்கு உதவுவதிலும் நம்மில் கிரியை நடப்பித்தலிலும் தொடர்வார். "உமது சத்தியத்தினாலே அவர்களை பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம்." சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ளுகிறவர்களுக்கு, "இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவ பெலனாயிருக்கிறது," "திவ்விய சுபாவத்திற்கு பங்குள்ளவர்களாகும் பொருட்டு மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தத்தங்களும் நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது." (2 பேதுரு 1:4) இதைக் காட்டிலும் உண்மையான தெய்வ பக்தியை தூண்டுவது வேறு எதுவும் இல்லை.

சுவிசேஷத்தில் நமக்கு முன் வைக்கப்பட்டுள்ள மாபெரும் பரிசுக்காக பந்தயத்தில் ஓடும் போது, நமது கர்த்தராகிய

இயேசுவின் அடிச்சுவட்டை பின்பற்றும் போது, அதன் கஷ்டங்கள் மற்றும் குறுகிய தன்மையைக் குறித்து நாம் முணுமுணுக்கக்கூடாது; அது குறித்து நாம் சர்ச்சை பண்ணக்கூடாது. கிறிஸ்துவின் பள்ளியில் நமது முன்னேற்றத்துக்கு தேவையான அனுபவங்கள் என்ன என்பதை கர்த்தர் அறிவார் என்பதை உணர்ந்து, தேவன் நமக்காக வைத்த வழியை தவிர்த்து வேறு வழியை நாடக்கூடாது. கீழ்ப்படிதல் சாத்தியமானால், கர்த்தரிலும் அவர் நமக்கு நியமித்திருக்கிற பாடுகளைப் பற்றி நமது வாய் புகார்கள் மற்றும் அதிருப்தியினால் நிறைந்திருந்தால், அவரது ஏற்பாட்டில் குறைந்த பட்ச அனுதாபத்தின் பேரிலாவது இருக்கிறோம் என்பதைக் குறிக்கிறது. அப்படிப்பட்ட கீழ்ப்படிதல் சாத்தியமானால் (ஆனால் அது சாத்தியமில்லை) அது தெய்வீக அங்கீகாரத்தை பெறவோ அல்லது "பரிசை" பெறவோ முடியாது, "உலகத்திலே சுடர்களைப் போல பிரகாசிக்கிற நீங்கள் கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே குற்றமற்றவர்களும் கபடற்றவர்களும், தேவனுடைய மாசற்ற பிள்ளைகளாயிருக்கும்படிக்கு, எல்லாவற்றையும் முறுமுறுப்பில்லாமலும் தர்க்கிப்பில்லாமலும் செய்யுங்கள்." (பிலிப்பியர் 2:14-16)

R4929

FERVENT IN SPIRIT - SERVING THE LORD
ஆவியில் அனலாயிருங்கள் – கர்த்தருக்கு ஊழியம் செய்யுங்கள்

இந்த சுவிசேஷ யுகத்தில் கடந்த பத்தொன்பது நூற்றாண்டுகளாக நமது பரம பிதாவானவர் அவரது பல்வேறு முகவர்கள் மூலம் தம்முடைய குமாரனுக்கு ஒரு தோழியை, பல அங்கங்கள் அடங்கிய ஒரு மணவாட்டியை, உலகத்தை ஒப்பிடும் போது ஒரு சிறு மந்தையை தேடிக் கொண்டிருக்கிறார். அநேக நற்பண்புகள் விரும்பப்படுகிறது; இவையனைத்தும் மணவாட்டி வகுப்பாரில், அவர்களது நிச்சயிக்கப்பட்ட மணவாளனின், அவர்களது இரட்சகரின் குணலட்சண சாயலை ஏற்படுத்தும். மாம்சத்தின்படி இவைகளெல்லாம் குறைவில் இருக்கின்றன. ஆனால் அதிர்ஷ்டவசமாக, அவர்கள் மகிமையான பரிசுக்கு பாத்திரரா அல்லது அபாத்திரரா என்று தீர்மானிப்பதற்கு மாம்சம் அடிப்படையாக இருக்காது. அனைத்தும் சித்தம், சிந்தை, இருதயத்தை சார்ந்தே இருக்கும். இது நல்லது மாத்திரமல்ல, முற்றிலும் சரியானது. "இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனை தரிசிப்பார்கள்." அவர்கள் தேவனுடைய பிள்ளைகளாக இருப்பார்கள். அவர்கள் இரட்சகருடன் உடன் சுதந்தரராக இருப்பார்கள்.

கர்த்தர் விரும்புகிற, அங்கீகரிக்கிற இந்த இருதய பரிசுத்தம் இருதய விசுவாசம் என்ற சொற்றொடரில் சுருக்கமாக கூறலாம். சத்தியம் மற்றும் நீதியின் கொள்கைகளில் தெய்வீக அரசாங்கத்தின் கொள்கைகளில் விசுவாசம் மற்றும் பிதாவாகிய தேவன் மற்றும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மற்றும் அவரது சரீர அங்கங்களின் மேல் விசுவாசம், மேலும் தெய்வீக நோக்கத்திற்கும் வெளிப்படுத்தலுக்கும் இசைவாக உலக மனுக்குலத்தின் மேல் அனுதாப அன்புகொள்வது ஆகும். அப்போஸ்தலர் கூறுகிறதாவது: "இவைகள் உங்களுக்கு உண்டாயிருந்து பெருகினால், உங்களை நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை அறிகிற அறிவிலே வீணரும் கனியற்றவர்களுமாயிருக்கவொட்டாது." "இவ்விதமாய், நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய நித்திய ராஜ்யத்துக்குட்படும் பிரவேசம் உங்களுக்கு பரிபூரணமாய் அளிக்கப்படும்." (2 பேதுரு 1:8,11)

இந்த உலகத்தோடு இணைந்திருக்கிற ஒரு குறிப்பிட்ட சக்தி "பெருகியிருக்கிறது." பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்ட தேவனுடைய பிள்ளைகள் அனைவரும் பிதாவானவரின் ஆவியினால், அன்பின் ஆவியினால், நீதி மற்றும் விசுவாசத்தின் ஆவியினால் ஊக்கப்படுத்தப்படுகிறார்கள். இந்த அன்பு வாழ்க்கையின் அனைத்து காரியங்களிலும் எவ்வளவு பெருகியிருக்கிறது, ஊடுருவியிருக்கிறது. கர்த்தரின் இந்த ஆவி நம்மில் பெருகியிருந்தால், அது நமது வேலை, நமது சந்தோஷம், நமது இல்லங்கள், நமது பட்டறைகள், நமது சமையலறைகள், சாப்பாட்டு அறைகள், படுக்கை அறைகள், நமது சிந்தைகளில் தாக்கத்தைக் கொடுக்கும்.

மிகவும் குறைவாக பெருகியிருக்கிற கர்த்தரின் ஆவியை அளவிட முடியுமா? மேலும் அதன் மூலம் சபை முதலானவைகளில் விசேஷித்த சந்தர்ப்பங்களில் சில ஆவிக்குரிய காரியங்களில் வெறும் சந்தோஷத்தை அனுபவிக்க முடியுமா? அது மிகையான அன்பு, மணவாட்டி வகுப்பாரின் அங்கங்களாக மேசியாவின் ராஜ்யத்துக்குட்படும் பிரவேசம் பரிபூரணமாக அளிக்கப்படுகிறவர்களின் வாழ்க்கையின் அனைத்து காரியங்களிலும் எங்கும் பரவியுள்ள நமது கர்த்தரின் செல்வாக்கு தேவைப்படுகிறது. அந்த பெருகுகிற விசுவாசத்தையும், அன்பையும் அவர்கள் பெற்றிருந்தால், அவர்கள் தேவனுடைய பிரியமான குமாரனாகிய இரட்சகரின் சாயலை பெற்றிருப்பார்கள். இல்லையென்றால் அப்படி ஆகமாட்டார்கள். அவருடைய குமாரனின் சாயலாகிறவர்கள் மட்டுமே மேசியாவின் ராஜ்யத்தில் பங்கு பெறுவார்கள் என்று தேவன் முன்னரே தீர்மானித்திருக்கிறார். மற்றவர்கள் "திரள் கூட்ட" வகுப்பாரில் இரண்டாவதான இடத்தை உண்மையில் அடைவார்கள். அவர்கள் சிங்காசனத்தை அடையவோ மணவாட்டி வகுப்பாரின் அங்கமாகவோ ஆகமுடியாது.

இந்த பெருகுகிற அன்பு தேவனுக்கும் நீதிக்குமான இந்த வைராக்கியம் எவ்வளவு தேவையானது, முக்கியமானது என்பதை நாம் தெளிவாக உணர்ந்து கொள்கிறோம். தீயவர்களுக்கு சரியான வழிகளில் அன்பு செலுத்தி உதவினாலும் அது அக்கிரமத்தை அந்த அளவுக்கு வெறுக்கும்.

அறுவடை ஒரு விசேஷித்த சோதனை காலம்

நாம் "அறுவடை காலத்தில்" இருக்கிறோம் என்பதை நிச்சயமாக அங்கீகரிக்கிறோம். கர்த்தர் இப்பொழுது கோதுமையை முதிரச் செய்து, அதை களைகளிலிருந்து பிரிக்கிறார் என்றும் நாம் யூகிக்க வேண்டும். கோதுமையை இரண்டு வகுப்புகளாக பிரிக்கிறார் என்று நாம் சொல்லலாமா? அது அறுவடை காலத்தில் விசேஷித்த சோதனையாக

இருக்கிறது. இது குறித்து வேத வசனங்களானது நமது கவனத்தை இழுக்கிறது; தேவனுடைய முழு சர்வாயுத வர்க்கத்தின் அவசியத்தை குறித்தும் அடிக்கடி எச்சரிக்கிறது. அசதியாயிராமல் ஜாக்கிரதையாக இருங்கள்; ஆவியிலே அனலாயிருங்கள்; கர்த்தருக்கு ஊழியம் செய்யுங்கள்.

அப்படிப்பட்ட சோதனைகள் கர்த்தரின் விளைந்த கோதுமை வயல் முழுவதும் முன்னேறுவதை நாம் எதிர்பார்க்க வேண்டும் என்பதை காவற்கோபுரத்தின் கண்ணோட்டத்தின்படி நாங்கள் உணருகிறோம். அன்பு மற்றும் விசுவாசம், நம்பிக்கை மற்றும் கீழ்ப்படிதல், சகோதர அன்பு மற்றும் பொறுமை ஆகியவைகளில் சோதனைகளை தேவன் அனுமதிக்கிறார். சில சமயங்களில் மந்தைக்கு, உதவி செய்து பாதுகாத்து, எச்சரித்து துணையாக இருக்க வேண்டிய மூப்பர்களால் கூட சோதனைகள் வரக்கூடும். சில சமயங்களில் தேவனுடைய வார்த்தை மற்றும் உதாரணங்களுக்கு எதிராக மூப்பர்கள் ஆளுமைமிக்க மனப்பான்மையுடன் சகோதரர்களின் பொறுமை மற்றும் அன்பை சோதிக்கிறார்கள்.

சில சமயங்களில் சோதனையானது அடுத்த பக்கத்திலிருந்து வரக்கூடியதாக இருக்கிறது. வகுப்பின் சில அங்கங்கள் கடுமையாக இருந்து, விசுவாசமுள்ளவர்களாக இருந்தாலும் தேவையற்ற பிடிவாதத்துடன் ஒட்டகத்தை விழுங்கவும், மூப்பர் எதைச் செய்தாலும் குற்றம் காணவும் மிகவும் தயாராக இருப்பார்கள். இப்படிப்பட்ட அனுபவங்கள் ஒரு பக்கத்திலிருந்தோ அல்லது மறுப்பக்கத்திலிருந்தோ வந்தாலும் அவை சோதனைகள் தான். ஒவ்வொரு கர்த்தருடைய ஜனமும் எப்படி இந்த சோதனைகளை ஏற்றுக்கொள்ளுகிறார்கள் என்பதைக் காணவும், அவர்களது இருதயத்திலும் குணலட்சணத்திலும் என்ன தாக்கத்தை பெறுகிறார்கள் என்பதைக் காணவும் அது அவசியமாகிறது. அனுபவங்கள் அவனை கசப்படையச் செய்தால், கோபமடையச் செய்தால், அவனது கவுரவத்தை ஆழமாக காயமடையச் செய்தால் அது அவனுக்கு எப்படிப்பட்ட ஒழுக்கத்துக்குரிய அனுபவங்கள் தேவை என்பதை நிரூபிக்கிறது. அவனது சொந்த குறைபாட்டை காண்பிக்கவும், இரக்கத்திற்காகவும் உதவிக்காகவும் தெய்வீக கிருபையின் சிங்காசனத்தை நோக்கவும் செய்கிறது.

மறுபடியும் சில பிரியமான வகுப்புகள் தப்பறையான போதனைகள் மூலமாக சத்துருவானவரின் தாக்குதலுக்கு உள்ளாகின்றன. சத்தியத்தையும் யுகங்களைப் பற்றிய தெய்வீக திட்டங்களையும் பாதுகாக்க முயற்சித்தலிலும் அதற்கு இசைவாக தங்களது நிலையை பராமரிக்கவும் கஷ்டங்களை பெறுகிறார். இன்னொரு வகையில் பாசாங்குத்தனமான அன்பான நண்பர்கள் மூலம் கஷ்டங்கள் எழும்பலாம்; அவர்கள் ஒன்றுமில்லாத வேறுபாடுகளை கண்டுபிடிக்க முயற்சிப்பார்கள்; இணக்கமான ஆவிக்குப் பதிலாக விவாதத்திற்குரிய ஆவியை தூண்டுவார்கள்; அன்பைக் காட்டிலும் முரண்பாட்டை தூண்டுவார்கள்.

அன்பான சகோதர சகோதரிகளே, ஏற்றுக்கொள்ளக்கூடிய அனைத்திலும் நாங்கள் துணை நிற்கிறோம். நாம் சோதனைக்காலத்தில் இருக்கிறோம்; இந்த பல்வேறு காரியங்கள் நமது சோதனைகளாக இருக்கின்றன. கர்த்தர், சத்தியம் மற்றும் சகோதரர்களுக்காக தீவிரமான ஆர்வத்தை செயல்படுத்தினால் மட்டுமே விசுவாசத்துடன் நிற்கவும் மற்றவர்களுக்கு விசுவாசத்துடன் நிற்க உதவவும் நாம் நம்பிக்கை கொள்ள முடியும். நாம் மனஉறுதி குன்றியவர்களாக இருத்தலாகாது. நாம் மனஉறுதியுடன் இருந்தால் சீக்கிரத்தில் நமது பரிசை அறுவடை செய்வோம். மேலும் "நல்லது, உத்தமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, உன் எஜமானனுடைய சந்தோஷத்துக்குள் பிரவேசி" என்கிற ஆண்டவரின் சத்தத்தைக் கேட்போம்.

நாம் அமைதியின்மை, முணுமுணுப்பு முதலானவைகளின் காலத்தில் இருக்கிறோம். இப்படிப்பட்ட முணுமுணுப்பும் முறுமுறுத்தலும் "பரிசுத்தவான்களாக ஒரு விசை ஒப்புவிக்கப்பட்ட விசுவாசத்திற்கு" ஏற்புடையதல்ல என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக. நாம் பரிசுத்த ஆவியின் கனிகளையும் கிருபைகளையும் நாம் அதிகமதிகமாக வளர்ப்போமாக. "விசுவாச வீட்டாரின்" நமது சகோதரர்களுடன் இவைகளை செயல்படுத்துவோமாக. "நமக்கு கிடைக்கும் சந்தர்ப்பத்திற்கு தக்கதாக யாவருக்கும் நன்மை செய்வோமாக." நாம் ஒருவருக்கொருவர் பொறுமையுடனும் சகிப்புத் தன்மையுடனும் இருப்போமாக. சமாதானம், சந்தோஷம், நலம் மற்றும் ஜீவனுள்ள தேவனுடைய சபையாகிய கிறிஸ்துவின் சரீரம் கிருபையில் வளரவும் விசேஷித்த விதமாக நாடுகிறவர்களுக்கு கர்த்தரின் விசேஷித்த ஆசீர்வாதம் வருகிறது.

R4930

TO SHOW THYSELF APPROVEL
உன்னை உத்தமனாய் நிறுத்தும்படி காண்பித்தல்

"நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய் பகுத்து போதிக்கிறவனாயும்
உன்னை தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு." 2 தீமோத்தேயு 2:15

தேவன் வேதாகம பாடங்களின் ஆறு தொகுதிகளை பெரிதும் ஆசீர்வதித்து "அறுவடை" வேலையில் பயன்படுத்துவதாக தெரிகிறது. இன்றைக்கு சத்தியத்தில் களிகூருகிறவர்கள் எவரும் இந்த அறிக்கையை கொஞ்சம் கூட மறுக்கமாட்டார்கள். சிலர் இந்த அறிக்கையை இதைக் காட்டிலும் இன்னும் பலமாக வெளிப்படுத்துவார்கள். இந்த சத்தியத்தில் கணிசமாக களிகூருகிறவர்களில் அநேகர் அதில் ஒரு அபூரண அறிவையே பெற்றிருக்கிறார்கள் என்ற உணர்வுக்கு நாம் அவ்வப்போது கொண்டு வரப்படுகிறோம், அவர்கள் சத்தியத்தில் வேரூன்றவில்லை. பூமியில் ஊன்றப்படவில்லை, ஸ்தாபிக்கப்படவில்லை, உறுதிப்படுத்தப்படவில்லை, அவர்களால் "சத்திய வசனத்தை நிதானமாய் பகுக்க" இயலவில்லை. அவர்கள் மற்றவர்களிடம் சத்தியத்தை போதிக்க வெட்கப்படாத ஊழியக்காரனாக இருக்கவில்லை.

இவர்களில் சிலர் சத்திய அறிவில்

குறைவுள்ளவர்களாகவும், வெறும் குழந்தைகளாகவும் ஆரம்ப நிலையிலும் இருக்கிறார்கள். அவர்கள் சத்தியத்தை தியானிப்பதற்கு முழு சந்தர்ப்பத்தை இன்னும் பெறவில்லை. சிலர் முதல் தொகுதியை படித்திருக்கிறார்கள். மற்ற தொகுதிகளில் முக்கிய குறிப்புகளை மட்டும் எடுத்திருக்கிறார்கள். அவர்கள் ஒரு வேளை வேதாகம வகுப்புகள் பற்றி அறிந்து, அதில் கலந்து கொண்டு, சகோதரர்களிடம் அதுகுறித்து விவாதித்து சில பிரசங்கங்களை கேட்டிருக்கலாம். இதன்மூலம் தாங்கள் ஆறு வேதாகம தொகுதிகளின் போதனைகளை அறிந்திருக்கிறோம் என்று கருதுகிறார்கள். அவற்றை படித்து அறிந்து கொண்டது போல நினைக்கிறார்கள்.

இது ஒரு பெரிய தவறாக இருக்கிறது. இன்னும் அது தீவிரமான தவறாக இருக்கிறது. ஏனெனில் ஒவ்வொருவரும் மற்றும் அனைவரும் விசேஷமாக சோதிக்கப்படவும் பரீட்சிக்கப்படவும் வேண்டிய காலத்தில் நாம் இருக்கிறோம். மேலும் தெய்வீக திட்டத்தை ஓரளவுக்கு புரிந்து கொண்டவர்கள், வழங்கப்பட்டுள்ள சர்வாயுத வர்க்கங்களில் ஒரு பகுதியை மட்டுமே பெற்றிருக்கிறவர்கள், இந்த தீங்கு நாளில் உலகம், மாம்சம் மற்றும் சத்துருவானவனின் தாக்குதல்களை தாக்குப்பிடித்து நிலைத்து நிற்க முடியாதிருப்பார்கள். கர்த்தரிடத்தில் சரியான வைராக்கியத்தையும் அவரது திட்டத்தில் சரியான அன்பையும் கொண்டிருப்பவர்களாக இருந்தால், அவர்கள் அந்த வைராக்கியத்தை வேதாகம தொகுதிகளை முழுமையாக படித்து அறிந்து கொள்ளுவதில் காண்பிக்க வேண்டும். இதற்கு குறைவாக செய்வது ஏற்புடையதல்ல.

நமது பிரியமான நண்பர்களில் சிலர் இப்போது அல்ல, வருடங்களுக்கு முன்பாக படித்தார்கள். அவற்றின் போதனைகளை எந்த அளவுக்கு ஞாபகத்தில் வைத்திருப்பார்கள் என்பதை கற்பனை செய்து பாருங்கள். உண்மையில் பார்க்கும் பொழுது அவற்றில் பெரும்பாலான போதனைகளை அறியாதிருக்கிறார்கள். நாம் ஒழுகுகிற மண்பாத்திரம். தெய்வீக சத்தியமாகிய அந்த விலையேறப் பெற்ற பொக்கிஷம், நாம் மீண்டும் நிரப்பவில்லையென்றால், அவையனைத்தும் வெளியேறிவிடும். மறுபடியும், அதை நிரப்புவதற்கு ஒருவழி வேதாகமத்திற்கு நேரடியாக செல்வது. வேதவாக்கியங்கள் மானிட போதகர்களின் அவசியத்தை வலியுறுத்துகிறது. அவர்கள் தங்கள் சொந்த சக்தியினால் வேத வாக்கியங்களை தெரிந்து கொள்வதைக் காட்டிலும் ஒரு போதகர் மூலமாக அதிகமாக தெரிந்து கொள்ளலாம். அப்படிப்பட்ட வாசகர்கள் இந்த வருடம் வேதாகம பாகங்களை படிக்காவிட்டால், முன்னர் ஆரம்பத்தில் அறிந்திருக்கிறவைகளை மறந்துவிடக்கூடும்.

R4930

WAITING FOR MESSIAH
மேசியாவுக்காக காத்திருத்தல்

மல்கியா 3:1; 4:3

"நீங்கள் விரும்புகிற உடன்படிக்கையின் தூதனானவர் இதோ வருகிறார் என்று கர்த்தர் சொல்லுகிறார். ஆனாலும் அவர் வரும் நாளை சகிப்பவன் யார்? அவர் புடமிடுகிறவனுடைய அக்கினியைப் போலவும் வண்ணாருடைய சவுக்காரத்தை போலவும் இருப்பார்." மல்கியா 3:1,2

இன்றைய பாடத்தை அமைக்கிற மல்கியாவின் தீர்க்கதரிசனம் பழைய ஏற்பாட்டின் புனித நூலை நிறைவு செய்கிறது. அது பாவத்தின் தெய்வீக கண்டனத்தை மாத்திரமல்ல, மீட்புக்கான ஒருதெய்வீக வாக்குத்தத்தத்தையும் உடையதாக இருக்கிறது. நெகேமியாவின் காலத்தில் ஒதுக்கப்பட்ட ஊழியத்திற்கு மிகவும் பொருந்துகிறது. அது இஸ்ரயேலர்கள் முழுவதுமாக மனந்திரும்பி, முழுவதுமாக சீர்திருத்த வேண்டும் என்று ஞாபகப்படுத்தியது. தேவையான சீர்திருத்தம் நமது காலத்திற்கும் சரியாக பொருந்துகிறது. அவர்களது வெளிப்படையாக கூறப்பட்ட பக்தி தேவனை திருடி தங்களையே வறுமையடையச் செய்தது. தேவாதி தேவனுக்கு முழு இருதயத்தோடு கூடிய ஊழியத்தை செய்தால் எப்படிப்பட்ட பெரும் ஆசீர்வாதங்கள் அவர்களுக்கு கிடைக்கும் என்பதை கவனிக்க வேண்டிய பொறுப்பு அவர்களுக்கு இருந்தது.

யூதர்கள், தங்களை மற்ற தேசங்களோடு ஒப்பிட்டு பார்த்து, தாங்கள் தேவனுடைய ஜனங்களாக இருந்ததின் பலனாக மற்ற தேசங்களைக் காட்டிலும் தங்களை மிகவும் கண்டிப்புடன் வைத்திருந்தார் என்பதை உணர்ந்திருந்தார்கள். அதனால் அவர்களது தேசம் மிகவும் உயர்ந்ததாக இருந்தது. அது அடிக்கடி கடுமையான தண்டனைகள் மூலம் வந்தது. தாங்கள் "தேவனுடைய தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்களாக" இருக்கிறதால் என்ன லாபம் என்ற கேள்வியையும் கேட்டார்கள். அவர்களைச் சுற்றியிருந்த தேசங்கள் திமிர் பிடித்தவர்களாக பெருமை கொண்டவர்களாக இருந்தும் அவர்களைக் காட்டிலும் தற்காலிகமாக செழித்தன. அவர்களால் இதை புரிந்து கொள்ள இயலவில்லை. அவர்கள் விசேஷித்த நோக்கத்திற்கான ஜனங்களாக தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் என்பதையும் எதிர்காலத்தில் அவர்களை தெய்வீக ஊழியத்திற்கு தகுதிப்படுத்துவதற்கு சோதனையான அனுபவங்கள் அவர்களுக்கு அனுமதிக்கப்பட்டன என்பதையும் அவர்கள் மறந்தார்கள். இவைகளே தெய்வீக கிருபைக்கு உண்மையான ரூபகாரங்கள். "தகப்பன் சிட்சியாத புத்திரன் உண்டோ? எல்லாருக்கும் கிடைக்கும் சிட்சை உங்களுக்கு கிடையாதிருந்தால், நீங்கள் புத்திரராயிருக்கமாட்டீர்கள்."

எதிர்கால பரிசைப் பற்றிய இந்த பாடம் இந்த வசனத்தை முன் கொண்டு வருகிறது. "கர்த்தருக்கு பயந்தவர்கள் ஒருவரோடொருவர் பேசிக் கொள்வார்கள்; கர்த்தர் கவனித்துக் கேட்பார்; கர்த்தருக்கு பயந்தவர்களுக்காகவும் அவருடைய நாமத்தை தியானிக்கிறவர்களுக்காகவும் ஞாபக புத்தகம் ஒன்று அவருக்கு முன்பாக எழுதப்பட்டிருக்கிறது. என் சம்பத்தை சேர்க்கும் நாளில் அவர்கள் என்னுடையவர்களாயிருப்பார்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்." (மல்கியா 3:16,17)

இஸ்ரேல் – நிழலும் உண்மைப்பொருளும்

இஸ்ரேலுக்கான கிருபைகளைப் பற்றிய அனைத்து தீர்க்கதரிசனங்களும் நிறைவேற வேண்டும் என்பதை மேற்கூறியவை வெளிப்படுத்துகிறது. அதாவது ஆவிக்குரிய இஸ்ரயேலரின் ஒரு பகுதியும் மாம்சீக இஸ்ரயேலரின் இன்னொரு பங்கும் நிறைவேற வேண்டும். யூத யுக விசுவாசிகளாகிய ஆபிரகாம், ஈசாக்கு மற்றும் யாக்கோபு

மற்றும் சகல தீர்க்கதரிசிகளும் நிச்சயமாக ஒரு பெரிய வெகுமதியை பெறுவார்கள். மேசியாவின் ராஜ்யம் மனித கண்களுக்கு தெரியாமல் ஆவிக்குரிய தளத்தில் ஸ்தாபிக்கப்படும் போது, முற்பிதாக்கள் என்று அழைக்கப்பட்ட பழைய ஏற்பாட்டுக்கால பாத்திரர்கள் ராஜ்யத்தில் பெரும் அந்தஸ்தை பெறுவார்கள்; அதில் அவர்கள் பூமிக்குரிய பிரதிநிதிகளாக இருப்பார்கள்; "உமது பிதாக்களுக்குப் பதிலாக உமது குமாரர் இருப்பார்கள்; அவர்களை பூமியெங்கும் பிரபுக்களாக வைப்பீர்." (சங்கீதம் 45:16)

சரித்திரம் நமக்கு காண்பிப்பது போல ஆவிக்குரிய இஸ்ரயேலரே மகா மேசியாவாக இருக்கிறார்கள். இவருக்காகவே யூதர்கள் காத்துக்கொண்டிருந்தார்கள். இந்த மேசியா அநேக அங்கங்களை உடையவராக இருக்கிறார்; இயேசுவே அதன் தலை, சபையார் அவரது அங்கங்கள். இயேசுவும் அவரது அங்கங்கள் அல்லது மணவாட்டியும் சேர்ந்து தான் "வானத்து நட்சத்திரங்களாகிய" ஆபிரகாமின் ஆவிக்குரிய சந்ததியை அமைக்கிறார்கள். இவர்கள் முதலில் நிறைவடைய வேண்டும். பழைய ஏற்பாட்டுகால பாத்திரர்கள் தங்களது ஆசீர்வாதங்களை பெறுவதற்கு முன்பும், மாம்சீக இஸ்ரயேலர் பூமியில் தேவனுடைய ராஜ்யத்தின் கருவாக கூட்டிச் சேர்க்கப்படுவதற்கு முன்பும் இந்த மேசியா இராஜ்ய வல்லமையில் மகிமைப்படுத்தப்படுவார். சகல ஜாதிகளும், கோத்திரங்களும் ஜனங்களும் பாஷைக்காரரும் இஸ்ரயேலரின் புதிய உடன்படிக்கையின் தங்களது பங்கைப் பெற முடிவாக ஓடுவார்கள். இவர்களைக் குறித்து பரிசுத்த பவுல் கூறுகிறதாவது: "நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால், ஆபிரகாமின் சந்ததியராயும் வாக்குத்தத்தத்தின்படி சுதந்தரராயும் இருக்கிறீர்கள்." (கலாத்தியர் 3:29) இவர்கள் ஆவிக்குரிய தளத்தில் தேவனுடைய சம்பத்தாகவும் கடந்த கால யூத விசுவாசிகள் பூமிக்குரிய தளத்தில் தேவனுடைய சம்பத்தாகவும் இருக்க வேண்டும். இவர்கள் மேசியாவின் ராஜ்யத்தில் சிறப்புமிக்க கனத்திற்கு குறிக்கப்பட்டிருக்கிறார்கள்.

"உடன்படிக்கையின் தூதனானவர்"

நியாயப்பிரமாணத்தை கடைபிடிக்க தவறியதால் மனம் சோர்ந்த இஸ்ரயேலர்கள், அதன்மூலம் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஆசீர்வாதங்களை பெறுவதற்கு, மோசையைக் காட்டிலும் பெரியவரான மகா மேசியா தோன்றுவார் என்ற வாக்குத்தத்தத்தின் மூலம் ஊக்குவிக்கப்பட்டார்கள். அவர்கள் சார்பாக தேவன், மேசியாவுடன் புதிய உடன்படிக்கையை ஏற்படுத்துவார். புதிய உடன்படிக்கையானது பழைய உடன்படிக்கையைக் காட்டிலும் மேன்மையானது. அது மேலான மத்தியஸ்தரைக் கொண்டிருக்கும். ஏனெனில் இஸ்ரயேலர் முன்னரே தேவனுடைய பரிபூரண பிரமாணத்தை பெற்றிருந்தார்கள். புதிய மத்தியஸ்தர் எந்த விதத்திலும் பிரமாணத்தை தளர்த்தமாட்டார். அவரது உடன்படிக்கையும் பாவ நிவாரண பலியும் மோசே ஏற்படுத்தியதைக் காட்டிலும் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். ஏனெனில் அது பாவத்தை நிரந்தரமாக நீக்கிப்போட்டு, விரும்புகிற இஸ்ரயேலருக்கு ஒரு புதிய இருதயத்தை, சதையான இருதயத்தை தரும். அதன் பிறகு சர்வ வல்லவருடன் அவர்களது உறவை பராமரிக்கிற ஒரு நிபந்தனையின் பேரில் அவர்களுக்கு நித்திய ஜீவன் வழங்கப்படும்.

எரேமியா தீர்க்கதரிசியும் இதை குறிப்பிடுகிறார். அவர் கூறுவதாவது: "இதோ நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார். அப்பொழுது இஸ்ரயேலர் குடும்பத்தோடும் யூதா குடும்பத்தோடும் புது உடன்படிக்கை பண்ணுவேன். நான் அவர்கள் பிதாக்களை எகிப்து தேசத்திலிருந்து அழைத்துவரக் கைப்பிடித்த நாளிலே, அவர்களோடே பண்ணின உடன்படிக்கையின்படியல்ல. அவர்கள் அக்கிரமத்தை மன்னித்து, அவர்கள் பாவங்களை இனி நினையாதிருப்பேன்." (எரேமியா 31:31,34)

அப்போதிலிருந்து இஸ்ரயேலரின் நம்பிக்கை மேசியாவில் இருந்தது. அவரது வருகை அவர்களுக்கு புது உடன்படிக்கையின் ஆசீர்வாதங்களைக் கொண்டு வரும். அதிலிருந்து அவர்கள் அவருக்காக காத்திருக்கிறார்கள். யூத விசுவாசத்தை அதாவது தேவனிடத்திலான உண்மைத் தன்மைக்கான விடாமுயற்சியை பாராட்ட யார் உதவக்கூடும்! அவர்களது முந்தைய அவிசுவாசம் மற்றும் விக்கிரக ஆராதனைக்கும் அது எவ்வளவு வேறுபாடாக இருக்கிறது என்பதை காண யார் உதவக்கூடும்! தேவன் முன்னறிந்து கூட்டிச் சேர்ப்பேன் என்ற வாக்குத்தத்தம் பண்ணின அவரது ஜனங்களை இன்னும் நேசிக்கிறார் என்பதை யார் சந்தேகிக்கக்கூடும்! புதிய உடன்படிக்கைக்கு கீழாக அவர்களை சொந்த தேசத்திற்கும் அவரது கிருபைக்கும் திரும்ப கொண்டு வருவார். (ரோமர் 11:25)

யூதர்கள் மிகவும் ஏங்கிக்கொண்டிருந்த, மிகவும் சந்தோஷத்துடன் நம்பிக்கை கொண்டிருந்த புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தர் அல்லது தூதனானவரின் காரியங்களில் அவர்கள் ஏமாற்றம் அடையக்கூடும் என்று மல்கியா தீர்க்கதரிசி தெளிவாக அறிவிக்கிறார். அவரது நாள் மிகவும் கடுமையானதாக இருக்கும் என்று அறிக்கை கூறுகிறது. "அவர் வரும் நாளை சகிப்பவன் யார்? அவர் வெளிப்படுகையில் நிலை நிற்பவன் யார்?" (மல்கியா 3:2) அநேகர் சகிக்க மாட்டார்கள். அநேகர் நிலை நிற்கமாட்டார்கள். பெரும்பாலானவர்கள் விழுவார்கள் என்பதே அறிவிப்பாக இருக்கிறது.

காரணம் கொடுக்கப்பட்டுள்ளது. அவர் அப்படிப்பட்ட பரிசுத்தத்தை, தூய்மையை எதிர்பார்க்கிறார். சிலரே அவரது தேவைக்கேற்ப வருவார்கள். சோதனைகள் வெண்வஸ்திரத்தின் ஒவ்வொரு கறைக்கும் எதிரியான வண்ணாருடைய சவுக்காரத்தை போல இருக்கும். அவரது தேவை புடமிடப்பட்ட வெள்ளியைப் போல இருக்கும். அதன் சகல கசடுகளும் பிரித்தலை உறுதி செய்ய உலையின் வெப்பம் அதிகமாக இருக்க வேண்டும். சோதனையானது குறிப்பிட்ட காலம் வரை நீடிக்கும். அவர் புடமிடுகிறவரைப் போல உட்கார்ந்து தீவிரமாக ஆய்வு செய்த வெப்பமானது மிகவும் அதிகமாகவோ அல்லது மிகவும் குறைவாகவோ இல்லாதபடியும் நேரம் மிகவும் அதிகமாகவோ அல்லது மிகவும் குறைவாகவோ இல்லாதபடியும் பார்த்துக்கொள்வார்.

புதிய உடன்படிக்கையின் தூதனான இந்த மகா மேசியா அவரது புடமிடுகிற, சுத்தப்படுத்துகிற வேலையை கடந்த பத்தொன்பது நூற்றாண்டுகளுக்கு முன்னரே ஆரம்பித்துவிட்டார். "முதலாவது யூதர்" என்கிற தெய்வீக கொள்கையை அவர் பின்பற்றினார். முதலாவது ராஜரீக வகுப்பாரை, மகிமையான மேசியாவின் வேலையில் தம்முடன் இணைவதற்காக புடமிடவும் சுத்திகரிக்கவும் ஆரம்பித்தார். மெய்யான லேவியராக இருக்கக்கூடிய சலுகை யூதருக்கு முதலாவது வந்தது. பெந்தெகொஸ்தே நாளில்

ஆயிரக்கணக்கானோர் சபையில் சேர்ந்தனர். ஆனால் மேசியாவின் சரீர அங்கங்களாகிய ஆவிக்குரிய இஸ்ரயேலர்களின் முன்னரே தீர்மானிக்கப்பட்ட எண்ணிக்கை நிறைவடையவில்லை.

அதிலிருந்து கடந்த பத்தொன்பது நூற்றாண்டுகளாக தெரிந்துகொள்ளும் வேலை தொடர்ந்து நடந்து கொண்டியிருக்கிறது. தேவன் சகல கோத்திரங்களிலுமிருந்து அழைத்துக் கொண்டும், இழுத்துக் கொண்டும் இருக்கிறார். அதற்கிசைந்து பலரை மகா சுத்திகரிப்பாளர் சுத்திகரித்துக் கொண்டும் புடமிட்டுக்கொண்டும் இருக்கிறார். நீதிக்காக இந்த துன்பங்களை அனுபவித்தால், அவர்கள் மேசியாவின் பாடுகளில் பங்கு பெறுகிறார்கள். அதன் மூலம், வரவிருக்கிற அவரது மகிமையில் பங்கு பெறவும் பாத்திரராக கருதப்படுவார்கள். சீக்கிரத்தில் "தெரிந்து கொள்ளப்பட்டவர்களின்" எண்ணிக்கை நிறைவடையும். புதிய உடன்படிக்கையின் இரத்தம் இஸ்ரயேலருக்கும் பூமியின் சகல கோத்திரங்களுக்கும் பயனுள்ளதாக ஆக்கப்படும். அதன் அடிப்படையில் மேசியாவின் ராஜ்யம் அல்லது நீதியின் ஆளுகை ஆரம்பிக்கும்.

R4931

"HE IS FAITHFUL AND JUST"
"அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்"

"நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மை சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியுமுள்ளவராயிருக்கிறார்." 1 யோவான் 1:9

புற மதத்தில் அன்பும் தயவும் இரக்கமும் நிறைந்த ஒரு தேவனை போதிப்பதில்லை. புற மத தெய்வங்கள் சக்திவாய்ந்ததாகவும், பயங்கரமானதாகவும், கடுமையானதாகவும் இருக்கின்றன. ஜனங்கள் அவர்களை பேய்களாக நினைத்து பயப்படுகிறார்கள். அவர்கள் அன்பான தேவனைக் குறித்து அறியாதிருக்கிறார்கள். அநேக கிறிஸ்தவர்கள் இருண்ட யுகத்தின் விசுவாச கோட்பாடுகளின் மூலம் தவறாக வழிநடத்தப்பட்டு வேதாகமம் அறிவிக்கிற தேவனை அங்கீகரிக்கவும் ஆராதனை செய்வதும் இல்லை என்பதை நாம் சொல்லவேண்டும். "தேவன் அன்பாக இருக்கிறார்" என்ற அறிக்கையிடப்படுகிற, அனைத்து கிருபைகளின் தேவனை அவர்கள் ஆராதிப்பதில்லை.

சங்கீதக்காரனின் வார்த்தைகள் ஒரு சரியான கருத்தை நமக்கு தருகிறது. "உமக்குப் பயப்படும்படி உம்மிடத்தில் மன்னிப்பு உண்டு." (சங்கீதம் 130:4) சர்வ வல்லவர் நீதியின் ஒரு உருவகமாக இருக்க வேண்டும் என்பதை எளிதாகவே காணமுடிகிறது. எனினும் நாம் போதிக்கப்படுகிற நீதியின் வகுப்பைச் சேர்ந்ததல்ல. அது உண்மையிலேயே ஒரு பெரிய அநீதியாக இருந்தது. தகப்பனாகிய ஆதாமை, தெய்வீக பிரமாணத்துக்கு கீழ்ப்படியாததால் தேவன் நீதியான தண்டனைக்குட்படுத்தினார். அந்த தண்டனை ஆதாமின் இனத்தின் அனைவருக்கும் பொருந்தும்படி செய்ததில் நீதியாக இருந்தார். அந்த தண்டனை எந்தவித எதிர்கால நம்பிக்கையும் இல்லாமல் தண்டனையை மனிதன் மேல் சுமத்தி, எந்தவித எதிர்கால நம்பிக்கையும் இல்லாமல் மிருகங்களைப் போல மரிக்க அனுமதித்திருந்தால், நாம் குற்றஞ்சொல்ல எந்தவித காரணமும் இருக்காது. அது ஒரு சாதாரண நீதியாக இருந்திருக்கும்.

ஆனால் தேவன் நம்மேல் தம் அன்பை செலுத்தினார். அவரது அன்பே, அவரை நாடவும், ஊழியம் செய்ய விரும்பவும், இயேசு கிறிஸ்துவின் அடிச்சுவட்டில் நடக்கவும் நம்மை கட்டுப்படுத்துகிறது. நீதியின் தேவையே தேவனுடைய சித்தம். இயேசுவில் விசுவாசம் உள்ளவர்களுக்கு, அவரது சீஷராகி அவர்களது சிலுவையை எடுத்துக்கொண்டு அவரைப் பின்பற்றக் கூடியவர்களுக்கு தேவன் நியாயப்படுத்துகிறவராகவும் நீதியாகவும் இருக்கும்படியாக ஒரு வழியை அவர் திறந்தார். இப்படியாக இவர்களின் மீட்கும் பொருளுக்கான ஏற்பாட்டையும் செய்திருக்கிறார். ஆதாமுக்கும் அவரது சந்ததிக்கும் ஆசீர்வாதத்தை கொடுப்பதற்கு அவர்களுக்கு அதிகமான நன்மையை கொடுக்கக்கூடிய ஒரு வழியை தேவன் நோக்கங்கொண்டிருக்கிறார். இப்படியாக தெய்வீக குணலட்சணத்தை காண்பித்தல் சர்வ வல்லவருக்கு வெறும் புகழ்ச்சியைக் கொண்டு வருவதற்காக அல்ல, ஆனால் அவரது சிருஷ்டிகள் அவரது குணலட்சணத்தில் பரிச்சயம் ஆக வேண்டும் என்ற நோக்கத்திற்காகவே ஆகும். அதன் மூலம் அவர்கள் அவர் மேல் நித்தியத்திற்கும் நம்பிக்கை கொள்வார்கள். மேலும் அவரது குணலட்சணத்தின் அழகைக் கண்டு, அவர்கள் அதே சாயலாகி அவர்கள் அபரிமிதமாக ஆசீர்வதிக்கப்படுவார்கள்.

இரட்சிப்பின் முதல் படி

தேவனுடைய திட்டத்தில் முதல் படி மனுக்குலத்திலிருந்து சில பரிசுத்தவான்களை, ஒரு விசேஷித்த வகுப்பை தெரிந்துகொள்வது தான். அவர்கள் ஒரு நோக்கத்திற்காக தெரிந்தெடுக்கப்படுகிறார்கள். தேவன் அவர்களில் கிறிஸ்து இயேசுவுக்குள் தம்முடைய கிருபையின் மகா மேன்மையான ஐசுவரியத்தை விளங்கச் செய்வார். (எபேசியர் 2:6,7) அவர் வாக்குத்தத்தம் செய்திருக்கிறபடி, பாவிகளை உளையான சேற்றிலிருந்து தூக்கி எடுத்து, மகிமையான நிலைமைக்கு, தெய்வீக சுபாவத்திற்கு, தூதர்கள், துரைத்தனங்கள் மற்றும் அதிகாரத்துக்கும் மேலாக உயர்த்துவார். இன்னும் அவர்களையும் பாவத்துடனான அவர்களது அனுபவங்கள் மற்றும் பாவத்தின் மேல் அவர்களது வெற்றிகளையும், சீக்கிரத்தில் அவர்களை கிறிஸ்துவுக்கு உடன்சுதந்தரராக்கி உலகத்தை ஆளுவதிலும், ஆசீர்வதிப்பதிலும் மற்றும் நியாயந்தீர்ப்பதிலும் பயன்படுத்த நோக்கங்கொண்டிருக்கிறார்.

முதற்பேறானவர்களின் சபை நிறைவடைந்ததை தொடர்ந்து பின்னால் பிறந்தவர்கள் வருவார்கள். சபையானது தேவ தூதர்களைப் போல ஆவிக்குரிய தளத்தில் தேவனுடைய புத்திரர்களாகும் சுதந்தரத்தை அடைவது தேவ நோக்கமாக இருக்கிறது. ஆனால் அது மாத்திரமல்ல பொதுவான மனுக்குலத்தை மேசியாவின் ஆளுகையில் தேவனுடைய பிள்ளைகளாகும்படியான சந்தர்ப்பத்தை கொடுப்பதும் அவரது நோக்கமாக இருக்கிறது. "ஏனெனில் சிருஷ்டியானது அழிவுக்குரிய (மரணம் மற்றும் பாவம்) அடிமைத்தனத்தினின்று விடுதலையாக்கப்பட்டு, தேவனுடைய பிள்ளைகளுக்குரிய மகிமையான

சுயாதீனத்தைப் பெற்றுக்கொள்ளும்." (ஆதாம் அவரது பரிபூரணத்தில் இருந்தது போல, மானிட குமாரர்கள் பாவம் மற்றும் மரணத்திலிருந்து விடுதலையாகி முழு சுயாதீனத்தை பெற்றிருப்பார்கள். தேவன் தம்முடனான முழு ஐக்கியத்தை அனைவருக்கும் வழங்குவார். (ரோமர் 8:21)

நாம் அறிக்கை செய்தால்

நமது வசனம், கிறிஸ்துவின் மணவாட்டி அங்கங்களாகவும், ஆவிக்குரிய தளத்தில் பிள்ளைகளுக்குரிய மகிமையான சுயாதீனத்தின் பங்குதாரராகவும் இருக்கும்படியாக தற்காலத்தில் தேவனால் அழைக்கப்பட்டவர்களைக் குறிப்பிடுகிறது. எனினும் மேசியாவின் ஆளுகையின் ஆயிரம் வருட யுகத்தில் பொருந்தக்கூடிய ஒரு கொள்கையையும் அறிவிக்கிறது. முதலில் அவர்கள் தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு, அவற்றிலிருந்து மனந்திரும்பி மேசியாவின் ஆசீர்வாதத்தை ஏற்றுக்கொள்ளுகிறவர்களைத் தவிர வேறு யாரும் பெரும்பாதையான பரிசுத்த வழியில் முன்னேற எதிர்பார்க்க முடியாது. பிறகு மேசியா, பாவத்தை அழித்து, பாவிகளை மேம்படுத்தும் நோக்கத்துடன் ஆளுகை செய்வார்.

வசனத்தை தற்காலத்திற்கு பொருத்திப் பார்க்கும் போது பொதுவில் பாவிகளை குறிக்காதபடி கிறிஸ்துவின் சபையை குறிப்பிடுகிறது. மறுபடியும் நாம் வாசிப்பதாவது: "நாம் பாவம் செய்தால் இயேசு கிறிஸ்து நமக்காக பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார்." இந்த பாவ அறிக்கை உலகத்தோடு சம்பந்தப்பட்டதல்ல. ஏனெனில் அவர்கள் விசுவாசம் மற்றும் அர்ப்பணத்தின் மூலம் இன்னும் அவர்கள் தேவனுடைய பிள்ளைகளாகவில்லை. நமது கர்த்தரின் ஜெபத்துடன் சம்பந்தப்பட்ட அறிக்கை கூறுகிறதாவது: "எங்களுக்கு பாவம் செய்தவர்களை நாங்கள் மன்னிப்பது போல எங்கள் பாவங்களை எங்களுக்கு மன்னியும்."

"நம்மை மன்னிக்க நீதியுள்ளவர்"

விசுவாசத்தினாலும், கீழ்ப்படிதலினாலும் கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டியானவர்கள், தங்களது சிலுவையை எடுத்துக்கொண்டு அவரைப் பின்பற்றி, பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்டவர்கள் அறியாமல் செய்த மீறுதல்களை விண்ணப்பத்தின் பேரில் தேவன் மன்னிக்க ஒப்புக்கொண்டிருக்கிறார். அது, தேவன் தம்முடைய பரிசுத்தவான்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதை நிறைவேற்றுவது தேவனுடைய பங்காக இருக்கிறது என்று அப்போஸ்தலர் யோவான் இங்கே கூறுகிறார். இதே காரியம் குறித்து பரிசுத்த பவுல் வலியுறுத்துகிறதாவது: "நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயம் செய்யும் கிருபையை அடையவும் தைரியமாய் கிருபாசனத்தண்டைக்கு சேரக்கடவோம்." (எபிரேயர் 4:16) கர்த்தர், தமது ஜனங்களின் மாம்சீக பலவீனத்தை சுதந்தரித்துக் கொண்டதின் மூலம் அவர்களின் தொடர்ச்சியான தோல்வியினால் வெட்கப்படுகிறதை முன்னறிந்ததால் இது அவர்களின் ஊக்கத்திற்காக வழங்கி உள்ள விசேஷித்த அறிவுரையாக இருக்கிறது. இது ஞாபகத்தில் வைக்க வேண்டிய முக்கியமான காரியமாக இருக்கிறது. ஒரு வருடம் முடிவடைந்து அடுத்த வருடம் ஆரம்பிக்கிற நிலைமையில், சகல கிறிஸ்தவர்களும் கர்த்தரிடம் அனுதினமும் தொடர்புகொண்டு, மன்னிப்பு மற்றும் உதவியின் கிருபையை பெறாமல் நாம் உறங்கச் செல்லக்கூடாது என்று நாம் அறிவுறுத்துகிறோம். இந்த காரியத்தை தாமதப்படுத்தினால், அவர்களுக்கும் கர்த்தருக்கும் இடையே ஒரு மேகம் வந்திருந்தால், இந்த வருட முடிவில் இந்த வாக்குத்தத்தங்களை அவர்கள் பயன்படுத்திக் கொள்வார்களாக, அதன் மூலம் புது வருடத்தை புதிய தொடக்கமாக ஆரம்பிக்கலாம். அவர்களது பிதாவானவரின் முகத்தில் புன்முறுவலுடனும், இரட்சகருடனான ஐக்கியத்துடனும் அவரது அடிச்சுவட்டில் ஜாக்கிரதையுடனும் தீவிரமாகவும் நடக்க புதிதான தீர்மானங்களை எடுப்பார்களாக.

வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்கள்

இன்னும் கர்த்தருடைய ஜனங்களாக ஆகாத உலகத்தாருக்கு பொருந்தக்கூடிய வேறு வேதவாக்கியங்கள் இருக்கின்றன. அவர்கள் இந்த வசனத்தில் உள்ளடக்கப்படவில்லை. இந்த வகுப்பார் கர்த்தருடைய வசனத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதை இங்கே குறிப்பிடுகிறோம். "வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்; நான் சாந்தமும், மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும்." (மத்தேயு 11:28,29) சுயநலத்தையும் பாவத்தையும் முயற்சிக்கிற அமைதியற்ற இருதயத்தில் ஓய்வு இல்லை. எனினும் இவைகள் சில சமயங்களில் அனுபவங்களை நடப்பிக்கின்றன. அவை சகலருக்கும் மேலான நண்பருக்கு, பாவத்தை சுமப்பவருக்கு களைப்புக்கு வழிநடத்துகிறது.

நம்மை உண்மையான சீஷனாக்கக்கூடிய, கர்த்தருடனான ஒரு பெரிய உடன்படிக்கையை செய்ய வருட ஆரம்பத்தைக் காட்டிலும் வேறு சரியான சந்தர்ப்பம் எப்பொழுது இருக்க முடியும். அதாவது சுயபலியின் உடன்படிக்கை, சுயத்தை வெறுத்தல், சுயநலத்தை துறத்தல் சிலுவையை எடுத்துக்கொண்டு கர்த்தரை பின்பற்றி செல்லுதல், பிரயாணத்தின் முடிவு மகிமையாகவும் ஆசீர்வாதமாகவும் இருக்கும் என்பதை அறிந்து செல்லுதல். ஆம், பரலோக ராஜ்யத்தை நோக்கிய வழியில் சோதனைகள் ஆசீர்வாதமானதாகவும் நன்மைக்காக ஒதுக்கித் தள்ளப்பட்டதாகவும் இருக்கும். ஏனெனில் இயேசுவும் அவற்றில் பங்குதாரராக இருப்பார்.

R4932

INTERESTING QUESTIONS
ஆவலைத்தூண்டும் கேள்விகள்

"நாம் எப்படி தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம்"

கேள்வி : அர்ப்பணம் பண்ணப்பட்ட விசுவாசிகள் தேவனுடைய பிள்ளைகளாக உண்மையிலேயே இருக்கிறார்களா அல்லது கருதப்படுகிறார்களா?

பதில் : அர்ப்பணம் பண்ணப்பட்ட விசுவாசிகள் உண்மையிலேயே தேவனுடைய பிள்ளைகள். வேதவாக்கியங்கள் காரியத்தை இப்படியாக அறிவிக்கிறது. "இப்பொழுது நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம். இனி எவ்விதமாயிருப்போம் என்று இன்னும் வெளிப்படவில்லை. ஆகிலும் அவர் வெளிப்படும் போது அவர் இருக்கிற வண்ணமாகவே நாம் அவரை தரிசிப்பதினால் அவருக்கு நாம் ஒப்பாயிருப்போம் என்று அறிந்திருக்கிறோம்." (1யோவான் 3:2) "பழையவைகள் எல்லாம் ஒழிந்து போயின. எல்லாம் புதிதாயின." (2 கொரிந்தியர் 5:17) நீங்கள்

தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறீர்கள் அல்லது நீங்கள் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கவில்லை. நீங்கள் சரியானபடி அர்ப்பணம் செய்திருந்து, தேவன் உங்களை பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் பண்ணியிருந்தால் நீங்கள் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறீர்கள். பிரியமான நண்பர்களே, இந்த காரியத்தை நமது மனதிலே தெளிவாக வைத்துக்கொள்ள வேண்டும்.

இங்கிலாந்தில் மாபெரும் ஆல்பர்ட் ஹால் கூட்டத்திற்கு பிறகு ஒரு தொழிலதிபர் எங்களிடம் கூறியதாவது: "உங்கள் பேச்சை கேட்பதற்காக நான் ஆல்பர்ட் ஹாலுக்கு சென்றிருந்தேன். நீங்கள் என்னை மனம் சோர்ந்து போகப் பண்ணினீர்கள்." முதலில் அவர் என்ன சொன்னார் என்பது எங்களுக்கு புரியவில்லை. தொடர்ந்து அவர் கூறியதாவது: "நான் ஒரு நல்ல எபிகோபல் சபையைச் சேர்ந்தவன் என்றும் தேவன் கொடுப்பதற்கென்று ஏதாவது இருந்தால், மற்றவர்களைப் போல நானும் நிச்சயமாக பெற்றுக்கொள்வேன் என்றும் நினைத்திருந்தேன். நீங்கள் பேசிய விதத்திலிருந்து ஒரு "சிறு மந்தை" மட்டுமே தேவன் வைத்திருக்கிற இந்த நன்மையான காரியங்களை பெறுகிறார்கள் என்று காண்கிறேன். நீங்கள் எனது விசுவாசத்தை முற்றிலும் கவிழ்த்துப் போட்டிருக்கிறீர்கள்."

அந்த கனவான் என்ன சொன்னார் என்பதைப் புரிந்து கொண்ட பிறகு, நாங்கள் மிகவும் சந்தோஷப்படுகிறோம் என்று கூறினோம். ஏனெனில் தேவனுடைய நிபந்தனைகளை அவர் தவறாக புரிந்துகொண்டதிலிருந்து அவரது மரணத்துக்கு முன்னரே அவரை எழுப்ப வேண்டும் என்று நாங்கள் விரும்பினோம். "நான் நரகத்திற்கு போவதைக் காட்டிலும் நான் உமக்கு ஊழியம் செய்வேன். இந்த அளவுக்குத்தான் உம்மில் விருப்பங்கொண்டிருக்கிறேன்" என்று கூறுகிறவர்களை தேவன் அழைப்பதில்லை. நீதியை சிநேகித்து அக்கிரமத்தை வெறுக்கிறவர்களையே தேவன் அழைத்துக்கொண்டிருக்கிறார். அந்த வகையானவர்களை அவரது விசேஷித்த இடத்திற்கு, தம்முடைய குமாரனின் உடன் சுதந்தரராயிருப்பதற்கு பெற்றுக்கொண்டிருக்கிறார். மீதியுள்ள மனுமக்களை அவர் அழைப்பதில்லை. இந்த சுவிசேஷ யுகத்திற்கு பிறகு உள்ள காலமே, பூமிக்குரிய தளத்தில் அவர்களது ஆசீர்வாதத்தை பெறுவதற்கும் மானிட பரிபூரணத்தை அடையவும் ஏற்ற காலமாக இருக்கும்.

ஆவிக்குரிய அல்லது பரலோக அழைப்பை பெறுகிறவர்கள் பரிசுத்தவான்களாக இருப்பவர்கள் மட்டுமேயாகும். இருதயத்தில் பரிசுத்தம் இல்லாதவர்களையும், தூய்மையான நோக்கங்கள் இல்லாதவர்களையும், விசேஷித்த தூய்மை இல்லாதவர்களையும் தேவனிடம் ஆழமான விசுவாசம் இல்லாதவர்களையும் கிறிஸ்துவின் சரீர அங்கங்களாக, இயேசுவுடன் இணைந்திருக்க தேவன் உயர்த்துவார் என்று எப்படி நாம் நினைக்க முடியும்? இப்படிப்பட்ட ஜனங்கள் மிகவும் உயர்ந்த இடங்களில் வைத்து தெய்வீக சுபாவத்தை அவர்களுக்கு கொடுப்பார் என்று நீங்கள் அறிந்தால் தேவனுடைய ராஜ்யத்தை நீங்கள் மதிக்கமாட்டீர்கள். காரியம் இப்படித்தான் இருக்கும் என்று நீங்கள் நம்பினால், சர்வ வல்லவரின் அரசாங்கத்தின் மேலிருந்து அனைத்து மரியாதையையும் நீங்கள் இழக்க வேண்டும். ஆனால் எல்லாவற்றிற்கும் மேலாக உயர்த்தப்பட்டு இயேசுவுடன் இணைகிறவர்கள் தம்முடைய குமாரரின் சாயலாக இருப்பார்கள் என்று தேவன் கூறினால், "அது சரியாக தோன்றுகிறது" என்று நீங்கள் கூறுவீர்கள். அது சரியானது தான், தேவனுடைய வழிகள் நீதியும் நியாயமுமானவைகள். "சர்வ வல்லமையுள்ள கர்த்தராகிய தேவனே, உமது வழிகள் உண்மையும் நீதியுமானவைகள்" என்று சொல்லாமல் நமது அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதிப்படுத்த முடியாது.

ஆனால் யாராவது நித்திய காலமாக அக்கினியில் வறுக்கப்படுவார்கள் அல்லது உத்தரிக்கும் ஸ்தலத்தில் கொஞ்ச காலம் இருப்பார்கள் என்று சொல்லுவதை நாம் சரி என்று ஏற்றுக்கொள்ள முடியாது. அதை நீதியானதாக நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. அப்படிப்பட்ட வழிகள் மிகவும் அநியாயமானவைகள். யாரும் தங்களது குறைவுகளுக்காக நித்திய கால வேதனையையோ, நூறு வருட வேதனையையோ அல்லது ஒரு வருட வேதனையையோ கூட அனுபவிக்க மாட்டார்கள். பலவீனமான, அபூரணமான மானிட ஜீவிகளை பூரணத்திற்கு பொறுப்பாக்கி அதில் குறைவுபட்டால் வேதனைப்படுத்தப்படுவார்கள் என்பது சரியானதாக இருக்காது. எந்த அளவுக்கு நீங்கள் தீமையோடு ஒத்துழைக்கிறீர்களோ அந்த அளவுக்கு அது உங்களுக்கு சரீர பிரகாரமாக, மனதின் பிரகாரமாக, நீதி நெறியின் பிரகாரமாக சீர்கேட்டை கொண்டு வரும். கீழே செல்லும் ஒவ்வொரு அடியும் மீண்டும் அதே பாதையில் திரும்ப வேண்டும். இந்த வாழ்க்கையிலோ அல்லது எதிர்கால வாழ்க்கையிலோ நன்மை அடைவதற்காக ஆகும். வேதவாக்கியங்கள் கூறுவது போல நீதிமானுக்கும், தீமை செய்பவர்களுக்கும் நீதியான இழப்பீடு உண்டு.

தேசமானது தனது ஓய்வை ஆசரிக்கும்படி கட்டாயப்படுத்தப்பட்டது

கேள்வி : வேதாகம பாடங்களின் தொகுதி 2இல் ஒரு அத்தியாயத்தில், இஸ்ரயேலர் முன்பு ஆசரிக்காத ஓய்வு நாட்களை அவர்கள் சிறைப்பட்டிருந்த காலத்தில் ஆசரிக்கும்படி கட்டாயப்படுத்தப்பட்டார்கள். இந்த ஓய்வு நாட்கள் தொகுதி 2இல் யூபிலி என்று ஏன் அழைக்கப்படுகிறது?

பதில் : இஸ்ரயேலர்கள் பாபிலோனில் இருந்த போது ஓய்வு நாளை ஆசரிக்கும்படி பலவந்தப்படுத்தப்படவில்லை. ஆனால் யூதர்கள் பாபிலோனில் இருந்த போது அவர்களது தேசம் ஓய்வை அனுசரித்தது என்று தொகுதி 2இல் கூறப்பட்டுள்ளது. தேவன் இவ்விதமாக கூறுகிறார். (2 நாளாகமம் 36:20,21) யூபிலி வருடத்தில் தேசமானது ஓய்வில் இருக்க வேண்டும் என்று யூதர்கள் கட்டளையிடப்பட்டார்கள். மற்ற மனுக்குலத்தாரைப் போல யூதர்களும் சுயநலமாக, வருட முழுவதும் தேசம் ஓய்வாக இருந்தால் வரி முதலானவைகளுக்கு என்ன செய்வது என்று பயந்தார்கள். ஆகையால் யூபிலிகளை அவர்கள் சரியானபடி ஆசரிக்கவில்லை. இஸ்ரயேலர்கள் சிறையிருப்புக்குப் போகும் வரை பத்தொன்பது யூபிலிகளை ஆசரித்திருந்தார்கள். அவர்களில் தேவன் மிகவும் அதிருப்தி அடைந்தார். அவர் கூறியதாவது: நீங்கள் தேசத்தில் இருந்த போது, தேசமானது தனது ஓய்வை சரியானபடி ஆசரிக்கவில்லை. நீங்கள் ஓய்வு நாளை சரியானபடி ஆசரிக்கவில்லை. இங்கே நாங்கள் யூதர்களை குறைகூறவில்லை, ஏனெனில் கர்த்தர் இப்படிப்பட்ட கட்டளையை அமெரிக்காவிலோ அல்லது வேறு எந்த தேசத்திலோ கொடுத்திருந்தால் சிலர் மட்டுமே இதை அனுசரித்திருப்பார்கள்.

நியாயப்பிரமாணத்தின்படி ஓய்வு வருடம் ஒவ்வொரு ஏழாவது வருஷத்திலும் வந்தது. ஏழேழு வருடங்களை எண்ணி ஐம்பதாவது வருடம் பெரிய யூபிலி வருடம். இப்படியாக இரண்டு

ஓய்வு வருடங்கள் வந்தன. அவற்றில் ஒன்று ஜம்பதாவது வருடம். மகா யூபிலி வருடமாக இருந்தது. இந்த ஓய்வுகளை யூதர்கள் அரைமனதுடன் ஆசரித்தார்கள். ஆகையால் தேவன் அவர்களை தேசத்திலிருந்து வெளியேற்றி, தேசமானது ஓய்வு வருடங்களை நிறைவேறும்படியாக அவர்களை சத்துருக்களின் தேசத்திற்கு அனுப்பினார். இந்த கால அம்சங்களின் முக்கியத்துவத்தை யூதர்கள் புரிந்துகொள்ளும்படி விரும்பவில்லை. ஏனெனில் யூதர்கள் இப்பொழுதும்கூட அதை புரிந்து கொள்ளவில்லை. தேவன் அதை யூதர்கள், புரிந்து கொள்ளவேண்டும் என்று வைத்திருந்தால், அதை அவர்கள் புரிந்து கொண்டிருப்பார்கள். ஆனால் கடந்த கால அம்சங்கள் எல்லாம் ஆவிக்குரிய இஸ்ரயேலர்களுக்காக கொடுக்கப்பட்டிருந்தன. இஸ்ரயேலரையும் முழு உலகத்தையும் தேவன் ஆசீர்வதிக்கக்கூடிய காலம் எப்பொழுது வரும் என்பதை காண்பிப்பதற்கான எண் 70 அங்கே வைக்கப்பட்டது. காலம் வரும் போது யூதர்கள் அவர்களது ஓய்வுகள், சிறையிருப்பு மற்றும் சகல காரியங்களின் நிறைவேறுதல்களை புரிந்து கொள்வார்கள். யூதர்கள் மற்றும் உலகத்தாரைக் காட்டிலும் அதிகமாக ஒரு உயர்ந்த, ஆவிக்குரிய ஆதாரத்திலிருந்து நாம் இந்த தகவல்களை பெறுகிறோம்.

R4939

PREPARING FOR THE KINGDOM
ராஜ்யத்துக்காக ஆயத்தமாகுதல்

லூக்கா 1:5-23

"விசுவாசமில்லாமல் தேவனுக்கு பிரியமாயிருப்பது கூடாத காரியம்." எபிரேயர் 11:6

நமது பரோயா வேதாகம பாட நெறி இந்த வருடத்திற்காக சர்வதேச குழுவினாரால் திட்டமிடப்பட்டிருக்கிறது. இது நமது ஆண்டவரின் பிறப்பிலிருந்து பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் வரையான அவரது பூமிக்குரிய வாழ்க்கையைப் பற்றிய ஒரு முழுமையான ஆராய்ச்சியாக இருக்கிறது. இன்றைய பாடம் இரட்சகரின் முன்னோடியும், அறிவிப்போனுமாகிய யோவான் ஸ்நானனின் பிறப்பு வரையிலான தேவனுடைய முன்னேற்பாடுகள் மற்றும் வாக்குத்தத்தங்களைப் பற்றியதாக இருக்கிறது.

இயேசுவின் பிறப்பிற்கு நான்காயிரம் வருடங்களுக்கு முன்னதாக தேவன், ஸ்தீரியின் வித்து சர்ப்பத்தின் தலையை நசுக்கும் என்று அறிவித்தார். கருகலான இந்த வசனம் விளக்குவதாக நாம் காண்பது என்னவென்றால் உலகில் பாவம் மற்றும் அதன் பேரழிவுக்குரிய சகல கிரியைகளும் ஈடு செய்யப்பட்டு ஏற்ற காலத்தில் அழிக்கப்படும் என்பதாகும். இதன் இறுதியில் தேவனுடைய வல்லமை கீழ்ப்படியாத ஏவாளின் ஆச்சரியமான குமாரன் மூலமாக கிரியை நடப்பிக்கும். இந்த வாக்குத்தத்தம் நிறைவேறும் அறிகுறி கூட இல்லாமல் நூற்றுக்கணக்கான வருடங்கள் கடந்தன. நமது இனம் இன்னும் மோசமாக சீரழிவு அடைந்தது. இன்னும் அதிகமதிகமாக நம்பிக்கையின்மைக்குச் சென்றது. சேத்தின் வம்சத்தில் ஏனோக்கு பிறந்தான். "அவன் தேவனுடன் சஞ்சரித்தான்." இன்னும் அவன் தேவனுடைய வாயாக இருந்து, "இதோ, கர்த்தர் ஆயிரமாயிரமான பரிசுத்தவான்களோடுங்கூட பூமியை நியாயந்தீர்க்க வருகிறார்" என்கிற தீர்க்கதரிசனத்தை கொடுத்தார். (யூதா 14,15)

உலகிற்கு ஒரு புதிய சோதனையை அல்லது நியாயத்தீர்ப்பை கொடுப்பதற்கான தமது நன்மையான நோக்கத்திற்காக யோசனையை தேவன் கொடுப்பதற்கு முன் இன்னும் ஒரு ஆயிரம் வருடங்கள் கடந்தன. பிறகு தேவனுடைய நண்பனாகிய ஆபிரகாமிடம் உலகிற்கான இன்னும் அதிக முழுமையான நம்பிக்கையை நற்செய்தியை இன்னும் அதிகமாக அறியச் செய்தார். பூமியின் சகல வம்சங்களையும் ஆசீர்வதிக்கும் தேவனுடைய நோக்கத்தை ஆபிரகாமிடம் அவர் அறிவித்தார். இரண்டாவதாக, இந்த ஆசீர்வாதம் மனுக்குலத்திற்கு ஆபிரகாமின் சந்ததி மூலம் வரும் என்பதை அறிவித்தார். "பூமியிலுள்ள வம்சங்களெல்லாம்உனக்குள்ஆசீர்வதிக்கப்படும்."(ஆதியாகமம் 12:3)

ஆபிரகாமுக்கு கொடுக்கப்பட்ட இந்த அறிவிப்பை பரிசுத்த பவுல் முதல் சுவிசேஷ செய்தி என்று கூறுகிறார். ஏனெனில் மற்ற அறிக்கைகள் மானிட மீட்பைக் குறித்து தெளிவற்றதாக இருந்தன. பாவமும், சர்ப்பமும், விசேஷித்த விதமாக ஆசீர்வதிக்கப்பட்ட ஸ்திரீயின் வித்து இல்லாமல் அழிக்கப்பட்டிருக்க முடியும். மனுக்குலத்தின் நியாயத்தீர்ப்பு ஏனோக்கு மூலம் குறிப்பிடப்பட்டது. ஆனால் மானிட ஆசீர்வாதம், பலனாக இருக்கும் என்று குறிப்பிடப்படவில்லை. எனினும் ஆபிரகாமுக்கு கொடுக்கப்பட்ட செய்தி தெளிவானதாக இருந்தது, "பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படும்." (கலாத்தியர் 3:8ஐப் பார்க்கவும்)

தேவன் வரவிருக்கிற ஆசீர்வாதங்களைக் குறித்து அறிவித்ததோடல்லாமல் அதைக் குறித்து ஆணையிட்டார். தேவனுடைய ஆணை ஆபிரகாமுக்கு அவசியமில்லை. அவர் ஸ்திரமாக நம்பினார். ஆணை நமது நிமித்தம் பண்ணினார் என்று பரிசுத்த பவுல் கூறினார். வாக்குத்தத்தத்தின் நிறைவேறுதல் நீண்ட காலம் ஒத்திவைக்கப்பட்டது. அதின் மேல் அதிக அக்கறையுள்ள நாம் தெய்வீக திட்டத்தில் சில மாற்றம் இருக்குமோ என்று பயப்படலாம். பரிசுத்த பவுல் ஆணையின்படி நடைபெறும் என்று உறுதியளிக்கிறார். "நமக்கு முன் வைக்கப்பட்ட நம்பிக்கையை பற்றிக் கொள்ளும்படி அடைக்கலமாய் ஓடி வந்த நமக்கு (சபை) இரண்டு மாறாத (தேவனுடைய வார்த்தை மற்றும் தேவனுடைய ஆணை) விசேஷங்களினால் நிறைந்த ஆறுதல் உண்டாகும்படி தேவன் அப்படிச் செய்தார். அந்த நம்பிக்கை நமக்கு நிலையும் உறுதியும் திரைக்குள்ளாக போகிறதுமான ஆத்துமநங்கூரமாக இருக்கிறது. நமக்கு முன்னோடினவராகிய இயேசு அந்த திரைக்குள் பிரவேசித்திருக்கிறார்." (எபிரேயர் 6:18-20) பிறகு, அப்போஸ்தலரின் வார்த்தைகள் மூலம் ஆபிரகாமின் வாக்குத்தத்தம் அல்லது உடன்படிக்கை இன்னும் நிறைவேறவில்லை என்பதைக் காண்கிறோம். நமது விசுவாசத்திற்கு அது இன்னும் ஒரு நங்கூரமாக இருக்கிறது.

ஆபிரகாமின் சந்ததியை தேடுதல்

வாக்குத்தத்தத்தின் வாரிசு இஸ்ரயேல் அல்ல, ஆனால் ஈசாக்காக இருந்தார். முடிவாக ஈசாக்கின் கோத்திரம் ஆபிரகாமின் சந்ததியாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஏற்ற காலத்தில் அவர்கள் அனைவரும் மோசேயினால்

சமுத்திரத்திலும், மேகத்திலும் ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டு, சீனாய் மலையில் கொடுக்கப்பட்ட நியாயப்பிரமாணத்தை கைக்கொள்ள வேண்டும் என்ற நிபந்தனையுடன் வாக்குத்தத்தத்தின் சுதந்தரரானார்கள். அந்த நியாயப்பிரமாணத்தின் தேவையாகிய கீழ்ப்படிதல் அவர்களுக்கும் நித்திய ஜீவனைக் கொண்டு வரும். அங்கீகரிக்கப்பட்டவர்கள் உடனடியாக, "பூமியின் சகல கோத்திரங்களும் ஆசீர்வதிக்கப்படுகிற" வாக்குத்தத்தம் நிறைவேறுவதில் தேவனுடைய முகவர்களாக இருப்பார்கள்.

மரண தண்டனைக்கு கீழாக இருக்கும் மற்ற மனுக்குலம் அனைவரும் அபூரணராக இஸ்ரயேலரும் இருந்ததால், அவர்களால் தேவனுடைய பூரண பிரமாணத்தை கடைபிடிக்க இயலவில்லை. ஆகையால் அவர்கள் மீதமுள்ள இனத்தாரைப் போல அவர்கள் அனைவரும் மரித்தார்கள். ஏனெனில் அவர்கள் பாவிகளாயிருந்தார்கள். இயேசு கூறியது போல அவர்களில் யாரும் பிரமாணத்தை கைக்கொள்ளவில்லை. பரிசுத்த பவுல் கூறியதாவது: "எந்த மனுஷனும் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே தேவனுக்கு முன்பாக நீதிமானாக்கப்படுவதில்லை." எனினும் நியாயப்பிரமாணத்தை கடைபிடிக்க முயற்சி செய்த யூதர்கள் மேல் பெரிய ஆசீர்வாதங்களைக் கொண்டு வந்தது. சிலர் பாசாங்குள்ளவர்களாகவும் இருதயத்திலிருந்து வராத ஜெபம் செய்கிறவர்களாகவும் இருந்தாலும் மற்றவர்கள் "கபடற்ற உத்தம இஸ்ரயேலாக" இருந்தனர்.

"உத்தம இஸ்ரயேலரின்" இருதய பூர்வமான விசுவாசத்தை தேவன் மெச்சினார். அவர்களுக்கு பெந்தெகொஸ்தே நாளில் உண்மையுள்ள ஊழியக்காரரிலிருந்து, கிறிஸ்துவின் வீட்டின் உண்மையுள்ள குமாரர்களாக உயர்த்தப்பட்ட சலுகையை தேவன் வழங்கினார். (எபிரேயர் 2:5,6) "அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார்." (யோவான் 1:12) இயேசு தமது ஜீவனை பலியாகக் கொடுத்து, மரித்தோரிலிருந்து தெய்வீக சுபாவத்தில் எழுப்பப்பட்டு, தேவதூதர்கள், கர்த்தத்துவங்கள் மற்றும் வல்லமைகளுக்கும் மேலாக உயர்த்தப்பட்டு தேவனுடைய வலது பாரிசத்தில் உட்கார்ந்தார். அவரது அடிச்சுவட்டில் நடக்க விரும்புகிற அனைத்து "உத்தம இஸ்ரயேலருக்கும் பரிகாரியாக" தோன்றியிருந்தார்.

மற்ற கிருபையான வாக்குத்தத்தங்கள்

தேவனுடைய அனைத்து வாக்குத்தத்தங்களும் ஆபிரகாமுக்கும் அவரது சந்ததிக்கும் உரியவை. அதன் பலனால் யூத யுக முழுவதும் ஜனங்கள், நியாயப்பிரமாணத்தை கைக்கொள்ளவும், ஆபிரகாமின் சந்ததியாக ஆக பாத்திரராகும்படி முயற்சித்த போது, தேவன் அவர்களிடம் தீர்க்கதரிசனமாக பேசினார். அவர் அவர்களிடம் மோசேயின் மத்தியஸ்தத்தின் மூலம் ஏற்படுத்தின உடன்படிக்கையைக் காட்டிலும் மேலான புதிய உடன்படிக்கையை ஏற்படுத்தும்படியான தமது நோக்கத்தை அவர்களுக்கு அறிவித்தார். புதிய உடன்படிக்கையின் கீழாக அவர்களது பாவங்களையும் மீறுதல்களையும் நீக்கிப்போடுவார். அவை எப்படி நீக்கப்படும் என்பது குறித்து அவர்களுக்கு கூறவில்லை. அவர்கள் வருடா வருடம் செலுத்தி வந்து பலிகளைக் காட்டிலும் "மேலான பலிகளின்" புண்ணியத்தினால் அவைகள் நீக்கிப்போடப்படும்.

இந்த புதிய உடன்படிக்கை, மோசேயைக் காட்டிலும் மேலான மத்தியஸ்தரைப் பெற்றிருக்கும் என்று தேவன் அவர்களுக்கு உறுதியளித்தார். அந்த மத்தியஸ்தரைக் குறித்து மோசே தீர்க்கதரிசனமாக கூறியதாவது: "உங்கள் தேவனாகிய கர்த்தர் என்னைப் போல ஒரு தீர்க்கதரிசியை உங்களுக்காக உங்கள் சகோதரரிலிருந்து எழும்பப் பண்ணுவார். அவர் உங்களுக்கு சொல்லும் எல்லாவற்றிலும் அவருக்கு செவி கொடுப்பீர்களாக. அந்த தீர்க்கதரிசியின் சொற்கேளாதவன் எவனோ, அவன் நிர்மூலமாக்கப்படுவான்." (அப்போஸ்தலர் 3:23) அந்த மாபெரும் மத்தியஸ்தர் மூலமாக அவர்கள் தெய்வீக பிரமாணத்தை பூரணமாக ஆசரிக்கக்கூடிய இடம் வரைக்கும் உதவி செய்யப்படுவார்கள். தேவன் பூமி முழுவதையும் ஆசீர்வதிக்க அவரைப் பயன்படுத்துவார். (எரேமியா 31:31)

அதன் பிறகு மேசியா என்றும் தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டவர் என்றும் அழைக்கப்பட்ட புதிய உடன்படிக்கையின் மேலான மத்தியஸ்தரை எதிர்பார்த்து எப்படி ஏங்கிக்கொண்டிருப்பார்கள்! புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தர், மகிமையான மேசியாவைப் பற்றிய தேவனுடைய செய்தியை கேளுங்கள்; அவர் கூறுவதாவது; "இதோ, நான் நீங்கள் விரும்புகிற உடன்படிக்கையின் தூதனானவரை (நீங்கள் நீண்ட காலமாக அவரது வருகைக்காக ஜெபித்துக் கொண்டிருந்தவரை, நீங்கள் என்னுடைய பிரமாணங்களை கடைபிடிக்கவும் மற்றும் உலகத்தை போதித்து ஆசீர்வதிக்கும் ஏஜெண்டாக ஆகவும் உதவுகிற வரை) உங்களிடம் அனுப்புகிறேன். ஆனால் அவர் வரும் நாளை சகிப்பவன் யார்? அவர் வெளிப்படுகையில் நிலைநிற்பவன் யார்? அவர் புடமிடுகிறவனுடைய அக்கினியைப் போலவும், வண்ணாருடைய சவுக்காரத்தைப் போலவும் இருப்பார். அவர் உட்கார்ந்து, லேவியின் புத்திரர் நீதியான காணிக்கையை செலுத்தும்படிக்கு புடமிட்டு சுத்திகரிப்பார்." (மல்கியா 3:1-3)

இப்படியாக மேசியாவின் வருகையைப் பற்றிய விலையேறப்பெற்ற வாக்குத்தத்தத்தை பெற்றார்கள். அது மாத்திரமல்ல, அந்த காலத்தில் வாழ்கிறவர்களுக்கு விசேஷித்த சோதனைகளும் கஷ்டங்களும் இருக்கும் என்கிற தகவலையும் பெற்றார்கள். இஸ்ரயேலின் ஒவ்வொரு தாயும் தனக்கு ஒரு மகன் பிறந்து, சர்ப்பத்தின் தலையை நசுக்க கூடிய ஸ்திரியின் வித்தின் பெற்றோராக இஸ்ரயேலரிடையே கனப்படுத்தப்பட வேண்டும் என்று விரும்பினார்கள். ஆபிரகாமின் வித்தின் மகா சிறந்தவர் மூலம் அறியப்படாத ஏற்பாடு அல்லது முறைமையின் மூலம் லேவியினர் புத்திரர் மேலும் இஸ்ரயேலர் மேலும் பெரிய ஆசீர்வாதம் வந்து, இவர்கள் மூலம் பூமியின் சகல வம்சங்கள் மேலும் வரும்.

இந்த வாக்குத்தத்தங்கள் யோவான் ஸ்நானின் பிறப்பு வரை சென்றது, இதைக்குறித்த பாடத்தைத்தான் நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். அவர் மேசியா இல்லை. ஆனால் அவரை அறிவிக்க வந்தவர். அவர் அதிசயத்தக்க விதமாக பரிசுத்த ஆவியினால், மானிட தகப்பன் இல்லாமல் பிறக்கவில்லை. நமது பாடம் அழகாக கூறுவது போல அவர் தேவனுடைய விசேஷித்த தூதன் என்று அறிவிக்கப்பட்டார். சகரியாவின் விசுவாசம் சோதிக்கப்பட்டு, அது பலமாக இருக்கக்கண்டு அவரது ஒன்பது மாதம் ஊமையாயிருந்த அனுபவம் உதவியது. இப்படியாக தமது ஒரே பேறான குமாரனை மனிதரின் மீட்பராக அனுப்பும் முன்பு தேவன் வழியை ஆயத்தம் பண்ணினார்.

R4940

THE VERY GREATEST PROPHET
மாபெரும் தீர்க்கதரிசி

லூக்கா 1: 57-80

"இஸ்ரயேலின் தேவனாகிய கர்த்தருக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக. அவர் தமது ஜனத்தை சந்தித்து மீட்டுக்கொண்டார்." லூக்கா 1:68

யோவான் ஸ்நானனைக் குறித்து இயேசு அறிவித்ததாவது: "ஸ்திரீகளிடத்திலே பிறந்தவர்களில் யோவான் ஸ்நானனைப் பார்க்கிலும் பெரிய தீர்க்கதரிசி ஒருவனுமில்லை. ஆகிலும் தேவனுடைய ராஜ்யத்தில் சிறியவனாயிருக்கிறவன் அவனிலும் பெரியவனாயிருப்பான் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்." (லூக்கா 7:28) மேசியாவின் வருகையை அறிவித்த தீர்க்கதரிசிகளில் கடைசியானவர் யோவான் ஸ்நானன் என்பதையும் மேசியாவின் ராஜ்யத்திலும் மகிமையிலும் இரட்சருடன் இணைவதற்கான ஒரு விசுவாசமுள்ள வகுப்பாரை பாவிகளுக்கிடையே தெரிந்து கொள்ளுகிற பெரிய வேலையின் ஆரம்பத்தையும் காண்பிப்பதால் இந்த வசனம் மதிப்பு மிக்கது. யோவான் இந்த ராஜ்ய வகுப்பாராக இருக்க முடியாது. இரட்சகர் தமது பலியை நிறைவேற்றுவதற்கு முன்னதாகவும் சிலரை கிறிஸ்துவின் ராஜ்யத்தில் அவருடன் உடன்சுதந்தரராக ஏற்றுக்கொள்ளும் பெந்தெகொஸ்தே ஆசீர்வாதங்களுக்கு முன்பும் அவர் தமது மாபெரும் வேலையை நிறுத்திவிட்டார். இதை யோவான் புரிந்து கொண்டதாக தெரிகிறது. ஏனெனில் அவர் அறிவித்ததாவது: "மணவாட்டியை உடையவனே மணவாளன்." ஆனால் நான் மணவாளனின் தோழன். மணவாளனுடைய சத்தத்தைக் குறித்து சந்தோஷப்படுகிறேன். (யோவான் 3:29)

யோவான் – "தேவனுடைய தயவு"

காபிரியேல் தூதனின் செய்திக்கு இசைவாக யோவான் ஸ்நானன் பிறந்தார். எட்டாம் நாளில் விருத்த சேதனம் பண்ணப்பட்டு பெயரிடப்பட்டார். குடும்ப உறவினர்கள் தகப்பனின் பெயரை வைக்கும்படி வற்புறுத்தியும், தாயும் தந்தையும் அவருக்கு யோவான் என்று பெயரிட்டார்கள். உடனே சகரியாவின் வாய் ஊமையாக இருந்தது சரியானது. அவரது விசுவாசம் அவருக்கு உதவியது. அவர் அனைத்து சந்தேகங்கள் மற்றும் வெளிப்பாடுகளையும் காபிரியேல் குறிப்பிட்ட பெயரைச் சூட்டி வெற்றிக் கொண்டார். "தேவனுடைய தயவு" என்கிற அழகான அர்த்தத்தை யோவான் என்ற பெயர் பெற்றிருக்கிறது.

யோவான் ஒரு அசாதாரணமான மனிதனாக இருந்தார். தேவனுடைய தூதனான இருந்ததைத் தவிர அவரது வாழ்க்கையில் வேறு எந்த நோக்கமும் இல்லை. அபிஷேகம் பண்ணப்பட்டவரை அறிவித்து, ஜனங்களை சோதனையான அனுபவங்கள் மற்றும் குணலட்சண சோதனைக்காகவும் தயார்படுத்துவதே அவரது ஊழியம். இந்த சோதனைகளைக் குறித்துதான் மல்கியா தீர்க்கதரிசி கூறுகிறார். மேசியா வெளிப்படும் போது, "அவர் உட்கார்ந்து, லேவியின் புத்திரரை நீதியாய் காணிக்கையை செலுத்தும்படி அவர்களை வெள்ளியைப் போல புடமிடுவார்." அதே போல யோவான் தனது ஊழியத்தில் அறிவித்ததாவது: "தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிருக்கிறது." நற்செய்தியை விசுவாசியுங்கள்; மனந்திரும்பி, சீர்திருந்துங்கள், அந்த ராஜ்யத்தில் பங்குபெற தயாராகுங்கள்.

எதிர்பாராத வழியில் சோதனைகள் வந்தன. மேசியா பூமிக்குரிய செல்வத்திற்கு சுதந்தரராகவோ, பெயர் பெறவோ அல்லது புகழுக்காகவோ பிறக்கவில்லை. அவருடைய அனுபவங்களும் அவருடைய போதனைகளும் நியாய சாஸ்திரிகளின் எதிர்பார்ப்புக்கு மாறாக இருந்தன. அவரது காலத்தில் பாவிகள் மற்றும் மாயக்காரரின் எதிர்ப்புகள் பற்றி எரிந்ததால் சிலரிடம் புடமிடும் விளைவு ஏற்பட்டு, அவர்களில் அநேகரை மெய்யான லேவியராகவும் அர்ப்பணம் செய்தவர்களாகவும் ஆக்கியது. அவர்கள் தங்கள் சரீரங்களை ஜீவ பலிகளாக அர்ப்பணித்து இரட்சகரின் அடிச்சுவட்டில் நடந்து மெய்யான ஆசாரியர்களானார்கள்.

சகரியாவின் தீர்க்கதரிசனம்

பழைய ஏற்பாட்டு கால தீர்க்கதரிசிகளைக் குறித்து பரிசுத்த பேதுரு நமக்கு கூறுவதாவது: "தேவனுடைய பரிசுத்த மனிதர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டு பேசினார்கள்." அவர்கள் அவர்களுக்கு புரியாத ஆழ்ந்த பரந்த சத்தியங்களை கூறினார்கள். இவைகள் எதிர்காலத்தில் தான் முழுமையாக வெளிப்படுத்தப்படும் என்று பரிசுத்த பேதுரு அறிவிக்கிறார். இந்த பாடத்தில் சகரியாவின் தீர்க்கதரிசனத்தில் இது உண்மையாக இருக்கிறது. வசனம் 68-70 இந்த தீர்க்கதரிசனத்தின் முதல் பகுதியை அமைக்கிறது. தேவனுக்கு ஸ்தோத்திரம், நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் முதலாவது வருகிறது. கிருபையான அவரது பழைய வாக்குத்தத்தங்கள் நிறைவேறுதலுக்காக அவருக்கு அனைத்து கனமும் ஸ்தோத்திரமும் கொடுக்கப்பட வேண்டும். "ஏனெனில் அவர் தமது ஜனத்தை சந்தித்து மீட்டுக்கொண்டார். இந்த வாக்குத்தத்தத்திற்கு இசைவாக தம்முடைய தாசனாகிய தாவீதின் வம்சத்திலேயே நமக்கு இரட்சணியக் கொம்பை ஏற்படுத்தினார்." இங்கே வழக்கத்தின்படி நிறைவேற வேண்டியிருக்கும் தீர்க்கதரிசனங்கள் நிறைவேறினதாக சொல்லப்படுகிறது.

யோவான் ஸ்நானன் இயேசுவுக்கு ஆறு மாதங்களுக்கு முன்பே பிறந்ததால் இந்த தீர்க்கதரிசனத்தின் காலத்தில் இயேசுவின் கர்ப்பந்தரித்தல் முன்னரே நிறைவேறியிருந்தது. ஆரம்பிக்கப்பட்ட காரியங்கள் இன்னும் நிறைவேறாமல் இருந்தும் கூட அது நிறைவேறினதாக பரிசுத்த ஆவி கூறுகிறது. "அவர் தமது ஜனத்தை சந்தித்து மீட்டுக்கொண்டார்." மீட்பு என்கிற இந்த வார்த்தை இயேசு ஞானஸ்நானத்தில் தமது ஜீவனை அர்ப்பணம் செய்து தமது பலியை கல்வாரியில் நிறைவேற்றின மீட்கும் வேலைக்கு மட்டும் பொருந்தாமல் மனுக்குலத்தை மீட்கிற முழு வேலைக்கும் பொருந்துகிறது.

நமது இனத்தில் "தெரிந்து கொள்ளப்பட்ட" சிறு கூட்டம் மட்டுமே இந்த சுவிசேஷ யுகத்தில் மீட்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆயிரம் வருட மேசியாவின் ஆளுகை மனுக்குலத்தை பாவம் மற்றும் மரணத்தின் வல்லமையிலிருந்து திரும்ப கொண்டு வருவதற்காக என்று

வேத வாக்கியங்கள் நமக்கு உறுதியளிக்கின்றன. ஆதாமும் அவரது பிள்ளைகளும் சத்திய அறிவுக்குள் கொண்டு வரப்படும் போது அவர்களில் அநேகர் தேவ தயவை ஏற்றுக்கொள்ள விரும்புவார்கள். கவிதை தீர்க்கதரிசனத்தின் முதல் பகுதியின் சாராம்சமாவது: நீண்ட காலமாக வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட மகா ஆசீர்வாதத்தின் நேரம் வந்திருப்பதால் தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக.

சத்துருக்களிடமிருந்து விடுதலை

இந்த கவிதை தீர்க்கதரிசனத்தின் இரண்டாவது பகுதி வசனம் 71 முதல் 75 வரை செல்கிறது. அது தேவனுடைய பிள்ளைகள் அவர்களது சத்துருக்களிடமிருந்து விடுதலையைப் பற்றியது. இங்கே ஒரு முக்கிய கருத்து என்னவென்றால் இங்கே குறிப்பிடப்படுகிற சத்துருக்களிடமிருந்து தேவனுடைய பிள்ளைகளைத் தவிர வேறு யாரும் விடுவிக்கப்பட மாட்டார்கள். எனினும் கடந்த காலத்திலும் தற்காலத்திலும் தீய செயல்கள் மூலமாக சத்துருக்கள் இருந்திருக்கிறார்கள். சர்வதேச தீமையினால் அல்ல. இப்பிரபஞ்சத்தின் தேவனால் குருடாக்கப்படுதல், ஏமாற்றும் தன்மை, விழுந்து போன மாம்சத்தின் பலவீனம் முதலானவைகளினால் ஆகும்.

மேசியாவின் ஆயிரம் வருட ஆளுகையில், குருடான கண்கள் திறக்கப்பட்டு, செவிடரின் காதுகள் திறக்கப்பட்டு, தேவனுடைய குணலட்சணத்தின் மகிமை தெளிவாக வெளிப்படுத்தப்பட்டு பாவத்தின் கொடுமையும் முழுவதுமாக வெளிப்படுத்தப்படும். இப்பொழுது சாத்தானின் சித்தத்தினால் சிறைபிடிக்கப்பட்டவர்கள் இம்மானுயேலின் முன்பு முழங்கால்கள் முடங்கி, தேவனுடைய மகிமைக்கு முன்பாக அறிக்கையிடுவார்கள். வேறு வார்த்தையில் சொல்லுவோமானால், இயேசு சொன்னது போல அவரது அர்ப்பணம் செய்த சீஷர்கள் தற்காலத்தின் அவரது "சிறுமந்தையாக" இருக்கிறார்கள். ஆனால் அவரது மகிமையான ஆளுகையில் அவர் இன்னொரு மந்தையை கூட்டிச் சேர்ப்பார். அவர் கூறியதாவது: "இந்த தொழுவத்திலுள்ளவைகளல்லாமல் வேறே ஆடுகளும் எனக்கு உண்டு; அவைகளையும் நான் கொண்டு வர வேண்டும். அவைகள் என் சத்தத்துக்கு செவி கொடுக்கும். அப்பொழுது ஒரே மந்தையும் ஒரே மேய்ப்பனுமாகும்." (யோவான் 10:16)

"ஒரே மந்தையும் ஒரே மேய்ப்பனும்" என்பது எல்லா ஆடுகளும் ஒரே சுபாவத்தில் இருக்கும் என்று குறிக்காது. மாறாக, தேவனுடைய திட்டத்தைக் குறித்து அப்போஸ்தலர் நமக்கு கூறுவதாவது: "பரலோகத்தில் இருக்கிறவைகளும் பூலோகத்தில் இருக்கிறவைகளுமாகிய சகலமும் கிறிஸ்துவுக்குள்ளே கூட்டப்பட வேண்டும்." (எபேசியர் 1:10) "சகலமும்" என்பதில் சபையாகிய மணவாட்டி தெய்வீக சுபாவத்தில் பிரதானமாக இருக்கும். திரள் கூட்டத்தார் கேருபீன்கள் மற்றும் தூதர்களைப் போல இருப்பார்கள். இரட்சிக்கப்பட்டு மானிட பூரணத்திற்கு மறுசீரமைக்கப்பட்டு மனுக்குலமானது தேவனுடைய மந்தையில் தாழ்ந்த நிலைமையில் இருப்பார்கள்.

தேவனுடைய ஜனங்கள் முடிவில் விடுவிக்கப்படக்கூடிய அவர்களது சத்துருக்களைக் குறித்து, பரிசுத்த பவுல் நமக்கு கூறுகிறார். சாத்தான் ஒரு சத்துரு. அவன் ஆயிரம் வருடங்கள் கட்டப்பட்டு முடிவாக அழிக்கப்படுவான். பாவம் ஒரு சத்துரு. அது மேசியாவின் ராஜ்யத்தில் பல்வேறு கட்டங்களில் நீக்கப்படும். மேலும் நாம் வாசிப்பதாவது: "பரிகரிக்கப்படும் கடைசி சத்துரு மரணம்." அது கல்லறைக்குச் செல்லும். ஆதாமின் மூலம் வந்த மரணம் இனி இராது. அதன் வல்லமையின் கீழ் யாரும் இருக்க மாட்டார்கள். உயிர்த்தெழுதலின் வல்லமை அனைவரையும் விடுவிக்கும். தெரிந்தே, மனப்பூர்வமாய் பாவம் செய்கிறவர்கள் மட்டுமே இரண்டாம் மரணத்தில் மரிப்பார்கள். அது நமது சத்துருவல்ல.

தயார்படுத்தும் வேலை

இந்த கவிதை தீர்க்கதரிசனத்தின் மூன்றாவது பகுதி, சகல சத்துருக்களும் அழிக்கப்பட்டு, தேவனுடைய பிள்ளைகளாவதற்கு தகுதியானவர்கள் உயர்த்தப்படுவதற்கு முன்னர் நடக்க வேண்டிய வேலையைப் பற்றி கூறுகிறது. இது வசனம் 76-79இல் பதிவு செய்யப்பட்டுள்ளது. அது யோவான் ஸ்நானன் தேவனுடைய விசேஷித்த தாசன். இயேசுவுக்கு முன்னோடியாக இருந்து, அவரது மாபெரும் வேலைக்கு எப்படி வழியை ஆயத்தப்படுத்தினார் என்பதைக் கூறுகிறது. தற்கால யுகத்தில் "பரம அழைப்புக்கு" அழைக்கப்பட்டு தேவனுடைய ஜனங்களாக முன்னரே இருந்த ஆயிரக்கணக்கானவர்களுக்கு இரட்சிப்பின் அறிவை கொடுப்பதே அந்த மாபெரும் வேலையாகும். நீதியின் சூரியன் எழும்பி, மேசியாவின் ஆளுகையில் மனுக்குலத்தின் இருளை சிதறடிக்கும் முன்னர் தேவ தயவினால் சபையானது "விடிவெள்ளி" அல்லது "விடியல்" நட்சத்திரத்தினால் அறிவு தெளிவு பெறுகிறது. தற்காலத்தில் குறைவான வெளிச்சம் கொண்ட இது சுத்திகரிக்கும் வல்லமையுடனும், சத்தியத்திற்கான வைராக்கியம் பற்றி எரியவும் விசுவாசிகளின் இருதயத்தில் பிரகாசிக்கிறது. அவை மரண இருளின் நிழலில் உட்கார்ந்திருக்கிறவர்களின் மேலும் பிராகாசிக்கிறது. இந்த "விடியல் நட்சத்திரம்" பரிசுத்தவான்கள் புதிய யுகம் வருவதற்கு முன்பு ஆபத்தின் நாளில் இருந்தாலும் அவர்களது பாதங்களை சமாதான பாதையில் வழி நடத்துகிறது. ஆமென்.

ஏழாம் சபையின் தூதனாகிய
சகோ.**C.T. ரசல்** அவர்களின் ரீ-பிரிண்ட்ஸின் தமிழாக்கத்தை வெளியிடுகிறோம்.
வெளியிடுபவர் :
சகோ. **R. செல்வராஜ்,** சென்னை வேதமாணவர் சபை,
எண். 22, முதல் தெரு, ராஜீவ் நகர், காலடிப்பேட்டை, திருவொற்றியூர், சென்னை - 600 019.
கைபேசி : 97909 00030. மின்னஞ்சல் : mbsaselvaraj@gmail.com
Website : www.thestudiesinthescriptures. com
FOR PRIVATE CIRCULATION ONLY